து. குலரஞ்சன்

உ

# பேராசை நீங்க ஞான வாழ்வு மலரும்

( விநாயகர் தருமநிதியம் ஸ்தாபகரின் அனுபவ சிந்தனை )

இலவச வெளியீடு ; கள 17

ஐந்தாம் ஆறும் வெளியீட்டின் திருத்திய பதிப்பு

நிறுவனர்
**விநாயகர் தரும நிதியம்**
தெனியம்மன் வீதி,
புலோலி மேற்கு, பருத்தித்துறை.

# விநாயகர் தரும நிதியம்

புலோலி மேற்கு, பருத்தித்துறை.

'ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன் ஞானகுரு வாணிபதம் நாடு.'

எமது நாடு, இனம், மொழிகளைக் காக்கக்கூடிய வகையில் தூய தமிழ்ச் சொற்களையே பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவோம்.

| வடசொல் | — தமிழ்ச்சொல் | வடசொல் | — தமிழ்ச்சொல் |
|---|---|---|---|
| நகல் | —பிரதி | உக்கிரமான | —கடுமையான |
| அந்தஸ்து | —நிலை | உபசாரம் | —முகமன் கூறல் |
| பரீட்சை | —தேர்வு | கலாரசனை | —கலைச்சுவை |
| வருடம் | —ஆண்டு | இனாம் | —அன்பளிப்பு |
| அவஸ்தை | —துன்பம் | தயார் | —முன்னேற்பாடு |
| சாஸ்திரம் | —கலை | தராசு | —நிறுவைமானி |
| அத்திவாரம் | —அடிப்படை | கரகோஷம் | —கையொலி |
| குரூரம் | —கொடுமை | கர்ச்சனை | —முழக்கம் |
| சகசம் | —இயற்கை | கர்வம் | —செருக்கு |
| சகாயம் | —உதவி | கலசம் | குடம் |
| சகித்தல் | —பொறுத்தல் | கலாசாலை | —கல்லூரி |
| சங்காரம் | —அழித்தல் | கனம் | —சுமை |
| சத்துரு | —பகைவன் | காயம் | —உடல் |
| கடூரம் | —கொடுமை | கிராமம் | —சிற்றூர் |
| கணிதம் | —கணக்கு | கிரீடம் | —முடி |
| கபோதி | —குருடன் | கீர்த்தி | —புகழ் |
| கமலம் | —தாமரை | குணம் | —இயல்பு |

கட்சி — பக்கம், சார்பு, அணி
கஷாயம் — மருந்து, குடிநீர்
க்ருததா ஆக்கியோன நூலாசிரியர்
கிரகித்தல் — பற்றுதல், உணர்தல்
சந்தோஷம் — மகிழ்ச்சி, உவகை, கழிப்பு
சந்திரன் — திங்கள், தண்கதிர், நிலவு, மதி, அம்புலி,
சபதம் — வஞ்சினம், ஆணை, உறுதி [பிறை

ஓம்

# சமர்ப்பணம்

இம் மாநிலம் உருவாகி அதில் உயிரினங்கள் உருவாக தனது சக்தியை எந்நேரமும் உதவிக்கொண்டிருக்கும் உண்மைப் பொருளான சூரிய பகவானுக்கும் ( சிவம் அல்லது மெய்ப்பொருள் அல்லது இறைவன்) பூமியை மட்டும் வலம் வந்து குளிர் சக்தியை நல்கிக் கொண்டிருக்கும் சக்திப் பொருளான சந்திர பகவானுக்கும், இவைகட்கு உறுதுணையாக சதாகாலமும் சூரியபகவானை வலம்வரும் அகப் பொருளான அறிவு, நியாயம், நீதி, ஞானம் ஆகிய சக்திகளை ஈந்து கொண்டிருக்கும். குரு, புதன், சனி, செவ்வாய் ஆகிய கிரக பகவான்களும், புறப்பொருளான கல்வி, ஆசை. தொழில் முதலிய சக்திகளைத் தரும் ராகு, வெள்ளி, கேது பகவான்களுக்கும்,

நாம் உருவாவதற்குரிய அணுவளவான விந்தை ஈந்து எம்மை இந்நிலைக்கு ஆளாக்கிய மூதாதையர் வழி தந்தைக்கும்,

அவ்விந்தை கருப்பையில் கட்டிவளர்த்து எமது உடல் உருவாக தமது உடலுழைப்பை நல்கிய அம்மைக்கும்,

தெய்வீகத் தமிழ் மொழியை உருவாக்கி உலகுக்கு அளித்த ஞான மேதாவிகட்கும் அம்மொழி எண்களை தத்துவ சிந்தனையுடன் உருவாக்கி உருவம் அமைத்த முது பெரும் ஞானமேதாவிகட்கும்,

எமக்கு இவ்வித அகப்பொருள் புறப்பொருள் வளர உதவி செய்து குருவாய் அமைந்த பெரியோர்கட்கும்,

எமது உள்ளம் சரீரம் வளரத் தேவையான உணவுச் சக்தியை அளித்துக் கொண்டிருக்கும் ஓரறிவுள்ள மரம் முதற்கொண்டு ஆறறிவுள்ள மனிதகுலம் வரையான சகல சீவராசிகட்கும்,

எமது உள்ளத்திலுள்ள அறிவுப் பொருளது வணக்கத்தைச் செலுத்தி இவர்கள் பாதார கமலங்கட்கு இந்நூலைச் சமர்ப்பணம் செய்வதில் பூரண ஆத்ம திருப்தி அடைகிறோம்.

நன்றி.

புலோலி மேற்கு,
1-7-1991

நிறுவனர்
விநாயகர் தரும நிதியம்

# உங்கள் சிந்தனைக்கு.......

உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி ஞானத்தைப் பெறுவதற்காகவே நாம் செயல் புரிகிறோம். நல்வினையை வளர்த்துக் கொண்டு வருபவர்கள் நல்லபிறவிக்கு வழி தேடுகின்றனர். கர்மயோகி தனது வாழ்வு அனைத்தையும் பொதுவாழ்வு ஆக்கிவிடுகிறான்.

அல்லல்பட்டுத் தேடிய பொருளிடம் நமக்கு ஆர்வமும், பற்றும் அதிகம்.

அரசன் தனி இடத்தில் அரசாட்சி செய்வதுபோல் ஆண்டவன் கயிலாயத்திலோ சத்தியலோகத்திலோ வசித்து உலகைப் பாதுகாக்கவில்லை. ஒரு சிலரைத் தண்டிக்கவும் வேறு சிலருக்கு சன்மானம் செய்யவும் ஆண்டவன் பரலோகத்தில் இருக்கவில்லை, பல தெய்வங்கள் இருப்பதாகப் பேசிக்கொள்ளுதல் அஞ்ஞானத்தின் விளைவு. அண்டகோடி அனைத்துக்கும் மூலப்பொருளாயிருக்கும் தெய்வம் ஒன்றே ஒன்றுதான், பிரபஞ்சமாகத் தென்படுவது உண்மையில் ஈசனே. நிகழ்கின்ற நிகழ்ச்சிகளெல்லாம் அவன் செயல், கண்ணில் தெரிவதெல்லாம் கடவுளின் தோற்றம், உயிர்கள் அனைத்திலும் வியாபித்திருக்கும் தெய்வத்தை சுய அநுபவத்தில் காண்பவன் ஞானியாகிறான்.

உயிர்கள் அனைத்திலும் தெய்வ சான்னியத்தை காண்கின்ற அளவு நம்மை நாம் உயர்த்திக்கொள்ள வேண்டும்,

ஒருவனுடைய மனப்பான்மையை மாற்றி அமைப்பதே அவனது துன்பத்தை துடைப்பதற்கு ஏற்ற உபாயம்.

அறிவு பண்படாதபோது சுவதர்மம் தெரிவதில்லை.

அறிவைத் தூய்மை செய்ய மனம் தூய்மையாகும்.

மனம் தூய்மையாக அறிவு தூய்மையாகும்.

இன்று உலகம் புனிதத் தன்மையில் குறைந்து வருவதைக் காண்கிறோம். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் மனம் அசுத்தமானதுதான். எமது **உண்மை** அல்லாத பேச்சுக்களின் ஒலி அலைகள் காற்றையும் காற்று நெருப்பையும் நெருப்பு நீரையும் நீர் பூமியையும் பூமி எமது உணவுகளையும் உணவுகள் எமது மனநிலையையும் மாற்றமடையச் செய்து வீண் பிரச்சினைகளை உண்டாக்குகின்றன.

நோய் மாற்றும் மருந்துகள் புதுப்புது நோய்களாக மாற்றப்படுகின்றன. வைத்தியசாலைகள் புது நோய்களைத் தரும் வைத்தியசாலைகளாக மாறியுள்ளன.

ஆக இவ்வுலகு புனிதமாக வேண்டுமானால், எல்லா மக்களும் இன்பமடைய வேண்டுமானால் **உண்மை** ஒளி மக்கள் உள்ளத்தில் ஊற்றெடுக்க வேண்டும்.

★ மனைவி, மக்கள், பொன், பொருள் இவைகளுக்காக மக்கள் குடம் குடமாய் கண்ணீர் சிந்துகின்றார்கள்; ஆனால் ஞானம் வேண்டும்; அருள் வேண்டும்; உண்மை வேண்டும் என்று அழுபவர் யார் ?

★ துருப்பிடிக்கும் பாங்கில் நம் வாழ்வு வீணாகிவிடக் கூடாது !

★ " மனிதர்களே சிறந்த ஆலயம், அதைவிட்டு கடவுளை வெளியே தேடுவதில் பயனில்லை " —விவேகானந்தர்

---

இந்நூலை அச்சிடும் பணியை மேற்கொண்டு சிலபல முதுமொழிகளையும் சேர்த்து சேவை மனப்பான்மையுடன் அச்சிட்டு உதவிய ஸ்ரீ வாணி அச்சக உரிமையாளர் அவர்கட்கு எமது அகப்பெரு நன்றி உரியதாகுக.

இவர்களது அறப்பணிச் சேவை மனப்பான்மை மென்மேலும் வளர இறைசக்தி உதவுவதாக.

தங்களை இருகரம் கூப்பி வேண்டுகிறோம் !

இந்நூல் தங்கள் கையில் கிடைத்ததும் குறைந்தது மூன்று முறை வாசியுங்கள். உங்களுக்கு இதில் புலன் செல்ல வாய்ப்பு இல்லாது போகில் கூடிய விரைவில் உங்கள் சிநேகிதரிடம் இந்நூலை கையளியுங்கள். இன்னும் வாசிக்க வேண்டிய மன எண்ணம் ஏற்படின் ஒன்பது முறை வாசித்த பின் அடுத்தவரிடம் ஒப்படையுங்கள். தங்கள் உதவிக்கு நன்றி.

*புலோலி மேற்கு,*
*01-08-1991*

நிறுவனர்
*விநாயகர் தரும நிதியம்*

ஓம்

# முன்னுரை

எமது 11ம் வெளியீட்டை பார்வையிட்ட பலர் அதற்கு முந்திய வெளியீடுகளையும் தங்கட்கு அனுப்ப வேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளனர். எம்மிடம் அவ்வெளியீடுகள் கைவசம் இல்லாமையால் அவைகளை மறுபதிப்பு செய்து வெளியிடுகிறோம். இவ்வெளியீடுகள் சம்பந்தமாக தனிநபர்கள், பொது நிறுவனங்கள் தங்கள் கருத்துக்களை எமக்குத் தெரிவிக்கும்படி நன்றியுடன் வேண்டுகிறோம். எமது நிறுவனம் பயன்கருதாப் பணியாக உடல் உழைப்பை நல்கி இவ்வெளியீடுகளை வெளியிடுவதில் பெரும் ஆன்மீக மகிழ்ச்சியடைகிறது. இவ்வெளியீடுகளில் குறிப்பிடப் பெற்றவை எமது எண்ணத்திற்கேற்ப சொந்த வாழ்க்கையில் செயல்படுத்தி அனுபவத்தில் கண்ட உண்மைகளாகும். நாம் சிறுவயதில் ஒரு நேர உணவுக்கு கஷ்டமடைந்த நிலையில் உடலுழைப்பால் மூடை சுமந்து சொல்லொணாத கஷ்டங்களை அனுபவித்தும் உண்மை தவறுவதில்லை. கடமையை ஆற்றுவதில் எவ்வித சிரமத்தையும் பொருட்படுத்தாது செயல் பெற்றதால் இன்று உண்மைப் பொருளின் ஒளி விளங்குகிறது. எமது பெயரையோ சுகவாழ்வையோ விரும்பாது கடமையை உணர்ந்து செயல் பெறுகிறோம். எவரும் இதே விதமாக செயல்பெற்றால் பொருளைத்தேடி அலைய வேண்டியதில்லை. எமது சொந்த வாழ்க்கை வரலாற்றை எழுதும்போது இவ் அனுபவத்தின் உண்மை தெரியவரும். எமது வாழ்க்கையில் இலவச சாமான்களை என்றும் வாங்கியது கிடையாது. எமது நிறுவன ஆலை இராணுவ நடவடிக்கையின் போது உடைக்கப்பெற்றும் நாம் எவரிடமும் நஷ்டம் கேட்டதில்லை. எமது கையால் உழையாத பணம் எமக்கு தேவையில்லை. ஆன்மா ஞான ஒளியில் நற்கதி அடைவதே எமது குறிக்கோளாகும். நன்றி.

புலோலி மேற்கு,
01-07-1991

**நிறுவனர்**
*விநாயகர் தரும நிதியம்*

# உயர்வு விரும்பும் மக்கள் உணர்வு மாற வேண்டும்

ஒரு மனிதன் அகங்காரத்தை ஒழிப்பானுனல் அவனுக்கு சுவர்க்கம் கிடைப்பது நிச்சயம். இயற்கையாக மனிதன் தனது ஆன்மா தெய்வத்தின் ஒருபகுதி என்பதை உணராமல் வேறு எங்கேயோ சுவர்க்கத்தை நாடுகிருன். மனிதன் தனது சுயரூபத்தை இழப்பதற்கு மூலகாரணம் பேராசை. அதற்குக் காரணம் மனம். மனத்தை திடப்படுத்தி காரியம் செய்யலாம். எனினும் மனத்தை அடக்குவது சுலபமன்று. ஒரு விநாடிதானும் மனம் ஓரிடத்தில் இருக்காது. ஆசைகள் அடங்கிய மனம் அதை விட்டு இருக்குமானுல் எங்கும் சாந்தியைக் காணலாம். நெய்வேத்தியத்தில் உட்கார்ந்த ஈ மறுவிநாடி மலத்தில் உட்காரும். அதேவிதமே பவித்திரமான எண்ணங்களை எண்ணும் மனமும் மறுகனம் நேர் மாருன எண்ணங்களை நினைக்கும். பழக்க காரணங்களால் மாறும் இவ்வித மனத்தை நிலைப்படுத்த முயற்சித்தல் சுலபமான காரியமல்ல. மனத்தை உண்மைப் பொருளின்பால் செலுத்தித்தான் கட்டுப்படுத்தலாம். தெய்வீகம் கமழும் தூய்மையான மனத்தின்கண் பேராசை கிடையாது. மனிதன் இயற்கையாகவே தெய்வத்தன்மை படைத்தவன் என்பதை உணர்கின்ருன் இல்லை. சிசு பிறந்த உடன் தாய் ஊட்டும் தாய்ப்பால் சிசுவின் அத்திவாரமாகின்றது. அவ்வேளை தாயானவள் நல்நோக்கம், நற்பழக்கம் அமையுமாறு நல் எண்ணத்துடன் பாலை ஊட்டுவாளானுல் அம் மனிதன் இங்கேயே மன ஒரு நிலைப்பாட்டுடன் தெய்வீகப் பண்பு மேலோங்க வாழ்வான். ஏழு கிரகங்களில் இருந்து வரும் சக்திகளும் தாயிடத்து ஊறிவரும் முதற் பாலும் அந்நேர வெளிச் சூழ்நிலையும் சிசுவின் அத்திவாரமாக அமைகின்றது. இதன் பிற்பாடு அமையும் கிராமச் சூழ்நிலையும் சமயச் சூழ்நிலையும் முதல் அத்திவாரத்தை பலமுள்ளதாக்க உதவக் கூடியதாய் அமைகின்றது.

உண்மையைக் கைக்கொண்டொழுகும் தவவலிமை படைத்தோர் சொன்னது பலிக்கும், அவர்கள் சினந்தால் உலகம் தாங்காது. தேவேந்திரனையும் கௌதம முனிவர் சொல்வன்மையால் தண்டித்தார்.

மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்
ஆகுல நீரபிற. என்றார் வள்ளுவர்.

மனம் உண்மைக்கு மாறாய் செயல்படக் கூடாது. நாங்கள் செய்யும் செயலில் - தொழிலில் இறைவனைக் காணும் (உண்மை) மன எண்ணம் நாளாந்தம் சிறுகச் சிறுகக் கூடி ஏற்படவேண்டும். அப்படியான மன எண்ணம் கூடுதலாய் அமைந்துவிட்டால் அவர் செய்யும் தொழிலில் இறைவன் அமைந்திடுவார். அவர் ஆலயம் செல்லவேண்டிய அவசியம் ஏற்படாது. உண்மைக்கு மாறாய் அதாவது ஏமாற்றுபவராய் உள்ளவர்கள் சொல் நிலையானதாய் இராது. உண்மையை இழக்க விரும்பாதவர்கள் என்ன நஷ்டம் வந்தாலும் சொன்ன சொல் மாறமாட்டார்கள். செய்யும் தொழிலில் உயிர் கொலையையும் கருணை மனப் பக்குவமாய் செய்யும் பழக்கம் ஏற்பட்டுவிட்டால் அவன் பாவத்தைக் குறைத்துக் கொள்ளலாம். ஜீவனோபாயம் காரணமாய் மீன்பிடித் தொழில் செய்பவர்களும் அத்தொழிலைக் கருணை உள்ளத்துடன் செய்வார்களானால் அவர்களும் உண்மையான இறைவனை அடையலாம். நாம் ஏன் பிறந்தோம். இனிமேல் பிறவாமல் இருக்க இறைவன் (உண்மை) திருவடியை அடைதலைக் குறிக்கோளாகக் கொண்டு உண்மையை நேசித்து வாழ்ந்தால் உண்மையான இறைவனை அடையலாம். நாங்கள் கோவிலுக்குப் போகிறோம். அங்கேதான் இறைவன் உள்ளான் என எண்ணுகிறோம்.

இறைவனுக்கு அர்ச்சனை செய்து தேங்காய் உடைத்தால் போதும் இறைவன் எங்கள் கஷ்டத்தைக் குறைப்பான். 2 ரூபா அர்ச்சனையை 10 ரூபா கொடுத்துச் செய்ய வேண்டும். பூசைக்கும் அதிகம் கூடக் கொடுக்கவேண்டும் என எண்ணுகிறோம். அப்படியே செய்கிறோம். கோவிலை விட்டு வீட்டுககு வரும் வழியிலே எங்கள் அகங்காரத்தை

வளர்க்கிறோம். வழியிலே பிச்சைக்காரரோ, வேறு சாதியினரோ எதிர்ப்பட்டால் அவர்களை வேண்டத் தகாதவர்களாய் கருதி அவர்கள் எவ்வளவு உடல் சுத்தமானவர்களாய் இருந்தாலும் வெறுக்கிறோம். எல்லா உயிர்களிலும் தான் இறைவன் இருக்கிறான் என்ற உண்மையை மறந்து செயல்ப்படுகிறோம். வீட்டிற்கு வந்ததும் கோவில் ஞானம் போய்விடுகிறது. உண்மையை மறைத்து எடுத்ததற்கெல்லாம் மூடி மறைத்துப் பிரட்டிக் கதைக்கிறோம். இதைத் தினசரிப் பழக்கமாக்கிக் கொள்ளுகிறோம். மற்றவர்களுக்கும் நாங்கள் உண்மையை மறைக்கும் பழக்கத்தை எங்களை அறியாமலே உருவாக்கிக் கொடுக்கிறோம். இப்படி செய்வதால் எமது ஆன்மாவிலுள்ள பஞ்சபூதச் சேர்க்கையிலுள்ள ஒரு பூதம் கூடியும் இன்னொன்று குறைந்தும் அசுரப்பண்பு நிலை மேலோங்குகிறது. இக் காரணங்களால் கோவில் கும்பிடும் பழக்கத்தை எல்லா மக்களும் நாடக பாணியில் பழக்கி வருகிறோம். கோவிலுக்குப் போகும்போது நல்ல உடுப்புகள் அணிந்து வெளி வேடதாரிகளாக நடந்து கொள்கிறோம். வெளிச் சுத்தத்திலும் பார்க்க உள்மனச் சுத்தமே மேலானது என்பதை மறந்து விடுகின்றோம். பஞ்ச பூதச் சேர்க்கை மாறுதலடைய நினைவுகள் மாறி மனத்துக்கண் பொய் இல்லாத அறத்தை நினைப்பதில்லை. இவ்விதமாக மற்றவர்களும் எம்மைப் பின்பற்றி கஷ்டபலனை அனுபவிப்பதற்கு நாம் காரணகர்த்தாவாகிறோம். ஆகவே அவர்களை கெடுத்த பலனையும் நாம் ஏற்கவேண்டியதே உண்மையின் முறை. ஆனால் அதையும் நாங்கள் ஏற்றுக்கொள்வதில்லை. ஆண்டவன் அதை வியாதி மூலமோ, வன்செயல் மூலமோ, இயற்கை மூலமோ உணர்த்தும் போதும் எம்மனம் ஏற்றுக் கொள்வதில்லை. 60 ஆண்டுகளின்முன் இருந்த நிலைமைகளையும் 80ன் பின் உள்ள நிலைமைகளையும் நன்றாக உணர்ந்து ஆராய்ந்தால் உண்மைகள் தெரியவரும். ஆனால் நாம் உண்மையை மதியாத காரணத்தால் அதையும் ஆராய மறுக்கிறோம். ஆடுகளை வெட்டும் முறைகளை நேரட்டோரம் காணும்போது எம் கண்களில் இரத்தம் சொரிகிறது. ஆகவே நாங்கள் எவராயினும் எத்தனை கோவில்களைக் கும்பிட்டாலும் உண்மையை மதியாத குற்றததிற்குரிய தண்டனையை அனுபவித்தேயாக வேண்டும்.

" வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு "

என்கிறார் திருவள்ளுவர். சாப வாக்கு இது. கட்டாயம் பலிக்கும்.

மாந்தர்தம் உள்ளத்தனைய உயர்வு என்று சொல்லும் போது எங்கள் மக்களுக்கு ஏன் உயர்வு வரவில்லை. உள்ளந்தான் காரணம். ஆகவே உயர்வு விரும்பும் மக்கள் உள்ளத்தை மாற்றியே ஆகவேண்டும்.

நல்லூர் உள்வீதியில் தரிசனம் செய்து நின்ற எட்டுப் பெண்களின் சங்கிலி காணுமல் அவர்கள் தரிசனம் செய்த மன எண்ணம் சடுதியாக மாற்றமடைந்த காரணமென்ன? இவைகள் எல்லாவற்றிற்கும் காரணம் இல்லாமல் இல்லை. காரணம் உண்மையை இறைவன் என எண்ணுமல் வேறு எங்கோ இறைவனைத் தேடுவதேயாகும்.

மாந்தர் உள்ளத்தில் கருணையாகிய உண்மை நிறைந்திருக்குமாஞல் உயர்ச்சி குறைவுபட மாட்டாது.

மனித வாழ்க்கையிலே இரு நிலைகள் உள்ளன. ஒன்று வெறுமனே உண்பதும் உறங்குவதுமான இலட்சியம் அற்ற கீழான வாழ்க்கை. இரண்டாவது உயிரை மேம்படுத்தும் இலட்சியமுள்ள மேலான வாழ்க்கை. மனிதனுடைய அகச் சீர்திருத்தம், புறச் சீர்திருத்தம் இரண்டையும் உள்ளடக்கிய நிலைதான் உண்மையான கலாசாரம். அகச் சீர்திருத்தம் உயிர் என்றுல் புறச் சீர்திருத்தம் உடல் ஆகும்.

எம் மூதாதையர் ஔவையார், திருவள்ளுவர், நாயன்மார்கள் முதலியோரின் அறிவாற்றலின்படி ஒழுகி நோய் இல்லாதவர்களாயும் பொய் இல்லாதவர்களாயும் நியாயம் நீதிக்குக் கட்டுப்பட்டு ஞான வாழ்வு வாழ்ந்து வந்தார்கள். அந்த நாட்களில் எழுத்து கணக்கில்லாமலே உண்மையை நேசித்து வாழ்ந்து வந்சுதால் வாய்ப் பேச்சே உறுதியாய் இருந்தது. உறுதி எழுந்துவகை குறைவாகவே இருந்தது. பேராசை இருக்கவில்லை இக்காரணத்தால் மாந்தருக்குள் நோய் பிணியுமிருக்கவில்லை. இறைவனைத் தங்கள் உள்ளத்

திலே இருத்தி உள்ளத்தில் கோயில் கட்டி வாழ்ந்து வந்தார்கள். மாதம் மும்மாரி பெய்தது. மக்கள் பூரண ஆயுளுடன் வாழ்ந்தார்கள். காலஞ்செல்ல மனிதனின் மனதில் ஆசையும் பொருமைக் குணமும் ஏற்பட்டு ஒருவரை ஒருவர் அடக்கி ஆள முற்பட்டார்கள். அதற்காகப் பொய் சொல்ல முற்பட்டார்கள். பொய் சொல்லிக் காரியம் சாதிப்பவர்களைச் சமூகத்தில் உயர்ந்தவர்களாகக் கருத முற்பட்டார்கள். காலஞ் செல்லச் செல்லக் கூடிய பகுதியினர் இவர்களின் சாமர்த்தியத் திறத்தில் கவரப்பெற்று தாமும் ஒன்றிரண்டு பொய்கூற முற்பட்டு கூடுதலான பொய் சொல்லப் பழகிவிட்டார்கள். உண்மையின் நிலைப்பாட்டை மறந்து விட்டார்கள். லாபம் கிடைக்குமானால் எவ்வளவு பொய்யும் சொல்லப் பழகிவிட்டார்கள்.

எதேச்சாதிகாரமாக நடப்பவன் மனம் போன போக்கில் நடப்பான். படுகுழியில் விழுந்தபோது தன்குற்றத்தை உணராமல் வேலைக்காரனையே குறை கூறுவான். இக் காரணங்களால் சண்டை சச்சரவுகள் மலியலாயின. வாய்ச்சொல்லை உறுதியாக எடுத்த காலம் நீங்கி எழுத்தில் கொடுத்த உறுதியையே புறக்கணித்து, பொய்பேசி பொய்யை உண்மையாக்க முனைந்தார்கள். இந்தப் பொய்யானது இவர்களின் ஆன்மாவில் என்ன மாறுதலை உண்டாக்கும் என்பதை உணரவில்லை. பொய் பஞ்ச பூதச் சேர்க்கையில் ஒரு பூதத்தைக் கூட்டி இன்னொன்றைக் குறைக்கிறது. ஆனால் இவர்களுக்கும் இவர்களின் சந்ததியார்களுக்கும் வீழ்ச்சியையும் முன் காலத்திலில்லாத புதுவிதமான நோய்களையும் அனுபவிக்க வேண்டிய சந்தர்ப்பம் கூடுதலாக ஏற்பட்டது. இந்த ஆன்மாவின் முன்வினைப் பயன் படியே இவைகள் செயல்படுகின்றன. இவற்றை ஆராய்ந்து உணர்ந்து உண்மையை நேசித்து செயல்படுமிடத்து இங்கேயே சுவர்க்கத்தை அடையலாம். ஆனால் இவற்றிற்கு பொறுமை மிகமிக முக்கியம். பஞ்சபூதச் சேர்க்கை விகிதாசாரத்தில் ஒரு பூதத்தில் ஒரு சிறுவளவு குறைந்தாலும் வேறொரு பூதத்தில் அவ் விகிதாசாரம் கூடுகிறது. இவற்றை எந்த விஞ்ஞானமும் கண்டு பிடிக்க முடியாது. நாங்கள் உண்ணும் உணவும் தொழிற்சாலையில் பிரிக்கப்பெற்று நீர்ப் பதார்த்தம் சலத்துடனும் கழிவுகள் மலக் குடலுக்கும் செல்கின்றன. உணவிலுள்ள சக்திப் பொருள் சிரசிற்கு அனுப்பப்பெற்று அங்கே அமிர்தமாக மாற்றம் பெறுகிறது.

இந்த அமிர்தமானது மன எண்ண மாற்றத்திருல் விந்து வாக்கப்பெற்று சலவாசல் வழியாக கருப்பையினுள் செலுத்தப்பெற்று பிள்ளைச் செல்வமாக உருவாக்கப் பெறுகின்றன. உண்மைதான் இயற்கை. அவ்வழியே நாங்கள் சென்ருல் எங்கள் பிறவிப் பயனை நீக்கி உண்மையை அடையலாம். பழைய முடியுடை அரசர்கள் எவ்வாறு பெயரெடுத்து வாழ்ந்தாலும் இன்று அவர்கள் பெயர் இல்லை. பெயர் இருந்தாலும் அதனுல் அந்த அரசனுயிருந்த ஆன்மாவுக்கு எவ்வித பயனும் இல்லை. 1960 காலங்களின் பின்பும் கொடிகட்டிப் பறந்த மன்னர்களை அறியலாம். ஈரான் மன்னர் ஷா எங்கள் கற்பனைக் கெட்டாத சுகபோகம் அனுபவித்தவர். பணியாட்கள் ஏராளம். இன்று அவரோ அவரின் சந்ததியினரோ இருக்குமிடம் அறியமாட்டோம். பிலிப்பைன்ஸ் ஜனுதிபதி மார்க்கோஸ் 3000 கோடி டாலர் பணம் உள்ளவர். ஆனுல் இன்று இருக்குமிடம் தெரியாது. இன்னும் எத்தனையோ அரபு நாட்டு ஜனுதிபதிகள், அமைச்சர்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போனுர்கள். இதிலிருந்து ஒரு அறிவை விநாயகன் தருகின்ருர். அதாவது உண்மைக்கு மாறுபாடாய் எதுவும் எந்த விஞ்ஞானமும் எந்த தந்திர மந்திரங்களும் உண்மையை மீறிய வகையில் செயல்பட முடியாது ''யாகாவாராயினும் நாகாக்க'' என்று அறிவுறுத்துகிருர். எந்தச் செயல்களும் அதாவது மனம் வருந்தும் சொல்லுகள், பேச்சுகள் முதல் அணுகுண்டு வரை உண்மையின் ஆட்சிக்குட்பட்டவையே. உண்மையை நோக்குமிடத்து எண் விஞ்ஞானமாகவும், எழுத்து இலக்கியமாகவும் அமைக்கப் பெற்றுள்ளது. ஆன்மாவானது சிறு அணுவிலிருந்து உற்பத்தியாகி பெரிதாக வளர்ந்து பின் காலஞ்செல்ல பஞ்சபூதச் சேர்க்கை விகிதாசாரம் மாற்றமடைகிறது அந்த ஆன்மாவின் வினைப் பயனுக்கேற்ற எண்ணப் புள்ளிகளும் வளர்ந்து அடுத்த பிறவிக்கு போய்ச் சேருகிறது.

௭—

# கடமை

பெரியவர்கள் செய்கின்ற தவறுகளுக்கெல்லாம் மன்னிப்புக் கொடுத்துக் கொண்டே போனால் தவறை வளர்த்துக் கொண்டு போனவர்களாகிறோம். மண்ணுலகில் பிறந்தவர்கள் யாவரும் துன்பப்பட்டேயாக வேண்டும். துன்பத்திலிருந்து விலகி யாரும் வாழ்ந்திருக்க முடியாது. துன்பம் ஏன் வந்தது என்று ஆராய்ச்சி செய்கின்ற திறமை மனிதனுக்கு உண்டு. துன்பப்பட்டுக் கொண்டிருப்பதற்கிடையில் துன்பம் ஏன் வந்தது என்று முறையாக ஆராய்ச்சி செய்வானானால் அவன் செய்த குற்றம் அவனுக்கு விளங்கும். எந்தக் காரணத்தினால் துன்பம் வந்திருக்கிறது என்பதையும் அவன் அறிந்து கொள்வான். வினைக்கேற்ற வினைப்பயன் உண்டென்ற உண்மையை அறிந்து கொண்டால் தீமையை விலக்குகின்ற விவேகம் தானாகவே அமைந்துவிடும். நலம் செய்கின்றவர்கள் எல்லாரும் நலனடைகிறார்கள். கேடு செய்கின்றவர்கள் கேட்டை அடைகின்றார்கள். இந்த நியதியை விட்டு யாரும் விலகிப்போக முடியாது என்பதை பராசக்தியின் ஆட்சித் திறமை எடுத்துக் காட்டுகிறது. புத்திர சந்தானத்தினாலோ செல்வச் செழிப்பினாலோ அழியாப் பெருநிலையை அடைந்துவிட முடியாது. தியாகத்தினாலே அழியாப் பெருநிலையை அடைய முடியும். நூல்களை நன்றாகப் படிக்க வேண்டும். படித்த பிரகாரம் வாழ்க்கையில் நடக்க வேண்டும். நல்ல கருத்துக்களை அடுத்தவர்களுக்கு மட்டும் எடுத்துக் கூறிவிட்டு தாங்கள் மட்டும் வாழ்க்கையில் கடைப்பிடிக்காமல் சிலர் இருக்கிறார்கள். இவர்களின் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் பயன் இல்லாத வெற்று வார்த்தைகளாகும்.

கட்டுப்பாடற்ற சமுதாயத்தை வழி நடத்துவதற்கு கட்டுப்பாடற்ற சமூகத்துக்கு எந்தவிதத் தகுதியும் இல்லை. வழி நடத்துவோர், வழி நடத்தும் தகுதி பெற்றோர் வழி காட்டாது போனால் சமுதாயம் நெறிகெட்டுப் போய்விடும். வழி காட்டுவதற்கு வழி காட்டுவோர் தேவைப்படுகின்றனர். தகுதியுடைய ஒருவர் கைமாறு கருதாமல் வழி நடத்துவதை தம்முடைய கடமையாக மேற்கொள்ளுகிறார். வழிகாட்ட வேண்டும் என அவர்களை யாரும் வற்புறுத்துவது இல்லை. வழி காட்டினால் இன்ன பரிசு கிடைக்கும் என ஆசை வார்த்தை சொல்பவர்களும் இல்லை அப்படியே சொன்னாலும் அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராய் இல்லை.

பிரதிபயன் எதிர்பார்க்காமல் இயற்கை தன்னுடைய கடமையைச் செய்கிறது. அதுபோன்று பதில் உதவி எதையும் நினைத்துக்கூடப் பார்க்காமல் சான்றோர்கள் சமூகத்துக்கு வழி காட்டுகின்றனர். அப்படி வழிகாட்ட வேண்டும் என்னும் உள்ளுணர்வு அவர்களை உந்தித் தள்ளுகிறது. அந்த உந்து உணர்ச்சி காரணமாக அவர்கள் அறநெறி புகட்டுகிறார்கள்.

அறிவையும், நல்லொழுக்கத்தையும், இறை உணர்வையும் மேம்படுத்துகின்ற கல்வியை வணிகப் பொருள் ஆக்குவதைப் போலப் பாவச் செயல் வேறு எதுவும் இல்லை. கல்வி மனத்தைப் பயன்படுத்தி அறிவை நெறிப்படுத்தி உள்ளிருக்கும் ஆன்மாவை துலங்க வைக்கின்றது. அத்தகைய கல்வியை ஊன் உடம்பைப் பெருக்குவதற்கு உதவும் ஒரு கருவியாக ஆக்கிவிடக் கூடாது. காலத்தின் கோலத்தில் கல்வியும், ஆலயங்களும் கடைச் சரக்காக மாறி இருப்பது தவிர்க்க வேண்டியதாகும்.

சிறுவயதில் இருந்தே ஒருவனை ஒழுக்கம் உள்ள வகையில் பயில்விப்பதும், ஒழுங்குள்ள குடிமகனாக இருக்க வேண்டும் என்னும் ஆவலுடையவனாகச் செய்வதும் நீதிமுறை வழுவாமல் ஆள்வதற்கும், ஆளப்படுவதற்கும் வழி காட்டுவதற்கும் உரியது எதுவோ அதுதான் கல்வி.

மூடர்களுடைய மூடத் தன்மையை உணராமல் அறிவு நூற் பொருளை கற்பித்துப் பயன் இல்லை. நல்ல விசயங்களைப் படிக்காத மூடர்களின் காதில் நுழைப்பதால் ஏற்படும் அவமானக் குற்றத்துக்கு அவ் ஆசிரியர்களே காரணம் ஆகிறார்கள்.

மனிதன் அறிவுடையவனாகும் பொழுது மனம் விரிவடைகின்றது. அப்பொழுது அவன் மயக்கத்துக்கு ஆளாகிறான். மயக்க நிலையில் இருக்கும் மனிதன் பொருந்தாத சில ஆசைகளை தன் உள்ளத்தில் வளர்த்துக் கொள்ளுகிறான். அவ் ஆசைகளை நிறைவேற்றுவதற்கு ஒழுக்கத்திலிருந்து தவறுகிறான். கட்டுப்பாடான வாழ்விலிருந்து பிசகிப் போவதற்கு ஆசை படைத்த மனிதன் முயல்கிறான். மக்களுக்கிடையில் பிணக்கு வந்துவிட்டால் அவர்களிடமிருந்து பெருந்தன்மை பறந்தோடிப்போய் விடுகிறது.

ஏ—

# கருணை

உன் தந்தையும், தந்தையின் தந்தையும் எங்கே சென்றிருக்கின்றனர். பணம், பாக்கியம் அல்லது உறவினர்கள் உதவினர்களா? ஆகவே உனது இதய குகையில் மறைந்து உறையும் உண்மைப் பொருளை நாடு. நம்மிடத்தில் கடவுளைத் தியானிக்க வேண்டும. (மெய்ப் பொருள்) என்ற ஆசை இருந்தாலும் முற்பிறவியில் நாம் செய்த காரியங்களின் பலனாக மனம் உண்மைப் பொருளை நினைக்க முடியாமல் உலக ஆசைகளின் நடுவே அலைந்து கொண்டிருக்கும். ஆனால் உண்மைப் பொருளைச் சிந்திக்கும் விருப்பம் ஆழமானதாகவும் வலிமையானதாகவும் அமைந்து போகுமானால் மனம் உண்மைப் பொருளின் திருவடிகளில் தவழுகிற ஆற்றலைப் பெறும். நாம் எம் மனதில் கருணையைப் பெறுவோமானால் உண்மைப் பொருளின் கருணையை அடைவது சுலபமாகும். எண்ணிக்கையில் அடங்காத எல்லாவிதமான அம்சங்களையும் அகற்றவல்லது தெய்வ பக்தி. (கடமை உணர்ச்சி) ஒன்றே என்னும் உண்மையை மக்களுள் சிலரே அறிய வருகின்றனர். திடீரென்று ஏதோ ஒரு காரணத்தினால் பணம் வந்து குவிகிறது. ஆசை என்னும் அரக்கன் அவர்கள் உள்ளத்தில் புகுந்து விடுகிறான். பிறகு ஆசையை நிறைவேற்ற அந்த மனிதன் படாதபாடுபடுகிறான். பணத்தைச் சம்பாதிப்பதில் சில வேளைகளில் நெறிதவற ஆரம்பிக்கிறான். ஆனால் சாந்தமான வாழ்க்கைக்கும் அத்தகைய பேராசைக் காரனுக்கும் வெகுதூரம். பேராசை காரணமாக அமைதியிழந்து அல்லல்படுகிறான்.

இன்பமும் துன்பமும் அவரவர் செய்த வினையின் விளைவாகும். மனிதன் கருமம் செய்யாமல் கணப் பொழுதும் வாழ்ந்திருக்க முடியாது. மூச்சு விடுவது கருமம். உணவு உண்பது கருமம். நீர் அருந்துவது கருமம். நீராடுவதும் கருமம். ஜீரணக் கருவிகள் செயல்படுவதும் கருமம். எண்ணங்களை எண்ணுவது கருமம். உள்ளத்தில் உணர்ச்சி ததும்பி எழுதுவது கருமம். ஆதலால் கருமம் செய்யாமல் எந்த சீவனும் கணப் பொழுதாவது இருக்க முடியாது. அங்ஙனம் மனிதன் புரிகின்ற கருமங்களுள் தனக்கு அனு

கூலம் இல்லாதவை துன்பத்தை வளர்க்கின்றன. எனவே அவரவர் செய்த செயலின் நன்மை தீமைக்கேற்ப இன்ப துன்பங்கள் விளைகின்றன என்பதை அறிந்து கொள்ளலாம். இறை அருள், மனித பிரயத்தனம், சூழ்நிலை ஆகிய மூன்றும் எங்கே ஒன்றுசேர்ந்து இருக்கின்றதோ அங்கு வெற்றியும் விரிவும் நல்வாழ்வும் சேர்ந்து அமைந்திருக்கின்றன.

ஆன்மாக்கள் பொதுப்பட மரணத்தின் மூலமாக ஒய்வு நிலையை அடைகின்றார்கள். அந்த ஓய்வுநிலை முடிந்தான பிறகு பஞ்சபூதச் சேர்க்கை விகிதாசாரம் மாறுபட்ட தன்மைக்கு ஏற்ப பொருத்தமான சூழ்நிலை வரும்பொழுது தோற்றத்துக்கு வருகின்றார்கள். நாம் செய்த செயல் ஒரு சென்மத்தோடு முடிந்து போகாது. தொடர்ந்து வினைக்கு ஏற்ற வினைப்பயனை அனுபவித்துக் கொண்டே வருகின்றோம். ஆதலால் உண்மையை விட்டு பிசகலாகாது. உண்மையைக் கையாளுவதன் மூலம் படிப்படியாக மேலே வந்து கொண்டிருக்கிறோம்.

சிறு குழந்தைகள் பொம்மை விளையாட்டில் ஆசை கொள்கிறது. ஒரு படித்தரம் வந்தபிறகு அந்த ஆசை விட்டுப் போகிறது. உலகத்தில் பற்று வைத்திருக்கும் வரையில் ஆசை வளர்ந்துகொண்டே போகிறது. ஆசையை அனுபவித்துப் பார்த்ததின் பின் இது வெறும் விளையாட்டு என்ற ஆசையின்மை வருகிறது. அன்றைக்குத்தான் நாம் ஞான மார்க்கத்திற்கு தகுதி உடையவர்கள் ஆகிறோம். சிறுபான்மையினோர்தான் ஆசையை வென்ற நிலையில் இருக்கின்றார்கள். ஆசையை முறையாக ஆராய்ந்து பார்ப்போமானால் நாம் கொண்டுள்ள ஆசைகள் பல பொருளற்றவை என்பதை உணரலாம். பொருளற்றவைகளைப் பொருளுள்ளவைகளாக எண்ணி மயங்கலாகாது. ஆராய்ந்து பார்க்கப் பார்க்க எமது ஆசை சிறுபிள்ளைத்தனம் என்பது விளங்குகிறது. சுத்தமான கற்பூரம் எரிந்தால் தட்டில் கரியையோ சாம்பலையோ காணமுடியாது. அவ்வாறே சுத்த ஆன்மாவிடம் ஆசைப் பாக்கி இருப்பதில்லை. ஆசை என்னும் வெங்காயத்தை உரித்துக்கொண்டே போனால் கடைசியில் மிஞ்சுவது ஒன்றுமில்லை. அவனிடம் எம்மை ஒப்படைத்துவிட்ட மனநிலை அடையலாம். தியாகம் என்பது சோம்பித்திரிவது அல்ல. கத்தி பாவியாமையினால் துருப்

பிடித்துப் போகிறது. மற்றொன்று தேய்கிறது. தேய்வது சிறந்தது. துருப்பிடித்துப் போகலாகாது. நம்முடைய செயல் பயன்படுகிற பாங்கில் தேயவேண்டும். துருப்பிடிக்கும் பாங் கில் நம் வாழ்வு வீணாகிவிடக் கூடாது.

உயர்வு தாழ்வு பற்றி ஆராய்வோமானால் இறைவன் படைப்பில் எல்லா ஆன்மாக்களும் சமத்துவமானவையே. உண்மையை நேசிக்கும் நாங்கள் அதற்கு மாறுபாடாக செயல்பட முடியாது. தாழ்ந்தவர்கள் என்று சொன்னால் நாங்கள் எம் அகங்காரத்தை வளர்க்கிறோம். உண்மைப் பொருளிலிருந்து உண்டான நாம் உண்மைப் பொருளில் உண்டான உயிரினங்களை வெறுப்பதால் கடவுளை வெறுத் தவர்களாகிறோம். தீண்டத் தகாதவர்கள் என்றால் சுத்த மற்றவர்கள் என்பது பொருள். சுத்தமான நடைபாவனை யுடைய மனிதப் பண்புள்ள எவரும் தாழ்ந்தவர்களாக முடியாது. அசுரப் பண்பு நிறைந்தவர்களை தாழ்ந்தவர்க ளாகக் கூறலாம். மனதிலுள்ள குறைநிலையை நீக்கும்போது (போதுமென்ற மனம்) எங்கும் இறைவனைக் காணும் நிறை நிலை உண்டாகிறது. நிறைநிலையை அடையும் பொழுது நாம் தெய்வப் பண்பை அடைகிறோம். இங்கு சமத்துவ மனப்பான்மை மேலோங்குகிறது.

சத்யசாயிபாபா கூறுகிறார் :-

இயற்கையின் இரகசியங்களை அறிய முற்பட்ட மனி தன் காற்று, நீர், பூமி, நெருப்பு ஆகியவற்றை தனக்கு அடிமையாக்கி விட்டான். இயற்கையைக் கட்டுப்படுத்தப் பழகிய மனிதன் தன்னைக் கட்டுப்படுத்தப் பழகவில்லை. இதுதான் இன்றைய மனிதனின் பரிதாப நிலை. அன்பு இரு வகை. ஒன்று இயற்கையான அன்பு. மற்றது தெய்வீக அன்பு. பிரதியுபகாரம் கருதுவது சாதாரண அன்பு. விளைவு கருதாமல் மற்றவர்களுக்கு வழங்குவது தெய்வீக அன்பு. ( நெஞ்சங்களுக்கு மனித மனங்களுக்கு, ஆன்மாக்களுக்கு இடையே விளைவது தெய்வீக அன்பு ) பேச்சினில் அன்பு உண்மை, செயலில் அன்பு தருமம், சிந்தையில் அன்பு சாந்தி. உலகில் மனிதகுலம் என்ற ஒரே சாதியும் அன்பு மதம் என்ற ஒரே சமயமும் தான் உண்டு என்பதை இளைய சமுதாயம் உணரவேண்டும். சுயநலம் அற்ற அன்புணர்ச் சியை இளையோரிடத்தே வளர்க்க வேண்டும்.

# தமிழர் மதம்

மறைமலை அடிகள்

ஒவ்வோர் ஆண்மகனும் பெண்மகளும் எல்லா உயிர்க்கும் வந்திருக்கும் இப்பிறவியின் நோக்கத்தையும் பயனையும் சிறிது ஆராய்ந்து பார்ப்பார்களானால் தாம் அறிவும் இன்பமும் பெறுவதில் வேட்கையுடையவராக இருத்தல் போலவே ஏனையவுயிர் ஒவ்வொன்றும் வேட்கையுடையவையாய் இருத்தலை எளிதில் அறிந்து கொள்ளலாம். நாம் அறிவும் இன்பமும் பெறுதல் பொருட்டு நமக்கு ஆகாத உயிர்களின் பிறவியை அழித்து விடுதல் எவ்வளவு தீயதென்பது நம்மைப் பிறர் அழிக்க வருங்காலன்றோ நடுக்கத்துடன் நமது உணர்வுக்குப் புலனாகின்றது. ஆகவே எந்த உயிரின் பிறவியையும் அழிக்காமல் நமது பிறவியின் பயனை நாம் அடைய முயலுதலே நமக்கும் பிறர்க்கும் அறிவையும் இன்பத்தையும் பெருகச் செய்வதற்குஏற்ற வழியாகும். அன்பும் அருளும் ஒருங்களாவிய அறவாழ்க்கையாகும் என்றுணர்ந்து கைக்கொண்ட பெருங்கொள்கையே தமிழ் மதத்திற்கு பேர் உறுப்பாய் விளங்குகின்றதென்பது உணரற்பாலது.

இன்றைய தமிழ் மக்கள் பார்ப்பனரைப் பார்த்து குல வேற்றுமை மிகுதியாய் பாராட்டி ஆடவரையும் மகளிரையும் கட்டாய மணத்தில் புகுத்தி வருதலின் அதில் புகுந்த ஆண் பெண் பாலார் பெரும்பாலும் துன்ப வாழ்க்கையிலேயே உழன்று மாய்கின்றனர். ஒத்த அன்பில்லாத தம் வயிற்றிலிருந்து நற்குண நற்செய்கை வாயாத நோய் கொண்ட மக்களைப் பெற்று உலக வாழ்க்கைக்கே பெருந் தீமை விளைவிக்கின்றனர்.

தாம்பெற்ற புதல்வர்க்கு கல்வியறிவு புகட்டி அவர் அதுகொண்டு தமது வாழ்க்கைக்கு வேண்டும் பொருள் தேடிக்கொள்ளுமாறு செய்து பின் அவரை இல்லற வாழ்க்கையிலே நிலைப்பிக்கும் அவ்வளவே பெற்றோர் மக்கட்குச் செய்யக் கடமைப் பட்டுள்ளார்கள். பணத்தைத் தேடி

வைக்கும் பெற்றோர் அவர்களுக்கு தீமையே செய்தவரா வார். தமது குடும்பச் செலவுக்கு மேற்பட்ட பொருளை வித்தியா விருத்திச் செயல்களுக்கு உதவியாகக் கொடுத்தல் வேண்டும். இக்காலத்தில் உணவளிக்கும் அறம் பயன் தரா மையுடன் அறச்சோறு தின்பார் பல தீச்செயல்கள் புரியு மாறு அவரை ஏவுகின்றது. பிணிபட்ட ஏழைகட்கும் கல்வி பயிலும் ஏழை மாணவருக்கும் வறிய ஆசிரியருக்கும் நூல் கள் இயற்றும் நூலாசிரியர்கட்கும் துறவிகட்கும் உவந்து நல்குதலே உண்மையான அறமாகும்.

நாம் அணுவளவான பஞ்சபூதங்களின் சேர்க்கையுள்ள ஒரு விந்துவிலிருந்தே உற்பத்தியானோம். அவ்விந்து மூலம் எம் உருவத்திற்குரிய அதாவது கண், மூக்கு, செவி, தலை, மயிர், கை, கால், நகம், தசை, எலும்பு, பல், இரத்தம் யாவற்றுக்குமுரிய மூலப்பொருள் செறிந்து அவை ஓர் உண் மைக் கோட்பாட்டுக்கமையவே உருவானோம். இந்த பஞ்ச பூதச்சேர்க்கை விகிதாசார உண்மைக் கோட்பாடு அணு வளவு மாற்றம் ஏற்படின் நாம் மனிதனாய் உருவெடுத்தி ருக்க முடியாது. எமது தந்தையின் விந்து கருப்பையில் செல்கையில் ( விந்து - உண்மைப் பொருள், கருப்பை - சக் திப் பொருள் ) அவர்களது பஞ்சபூதச் சேர்க்கை மன எண் ணத்தின் பிரதிபலிப்புக்கேற்ப எமது உருவங்கள் அமைந்து விடுகின்றன. நாம் உண்மைக்கு மாறாய் செயல்பெற முயற் சிக்கும்போது பஞ்சபூதச் சேர்க்கை விகிதாசாரம் மாறுபா டடைந்து எமது உருவநிலையில் எமக்குத் தெரியாமலே உள் தொழிற்பாடுகள் மாறுபாடாய் செயல்பெற்று எமது விதியை மாற்றியமைக்கின்றன. இவைகளை ஆராய்ந்து அனு பவத்தில் கண்டறிய நுண்ணறிவு தேவை. உண்மைக்கு மாறாய் செயல் பெற்றிருந்தால் அந்த நுண்ணறிவினாலும் உண்மையை கண்டறிய முடியாது. நாம் உண்மை பேசா மல் மறைக்கும்போது உள் ( இரத்தோட்டம் முதலிய ) செயற்பாடுகள் கோட்பாட்டுக் கமையாத காரணத்தால் நோயாகவும் அங்க மாற்றங்களாகவும் உருவெடுத்து எம்மை பொய்நிலைக்கு கொண்டு செல்லும் செயலை உடலின் உள் ளேயே அமைக்கின்றன. ஞான அறிவினால் மட்டுமே இவற்றை உணரமுடியும்.

௭—

# தற்கால உலகம்

இளைஞன் ஒருவனுடைய தாய் அவன் ஆன்ம சிந்தனை அறிவு விரும்புவதை மறுக்கிறாள். நீ என்னைக் கொன்று என் ரத்தத்தைக் குடிப்பதற்கு நிகர் எனத் தடை சொல்லுகிறாள். ராம பக்தியில் ஈடுபட்டிருந்த பரதன் தன் தாயின் சொற்படி நடந்து கொள்ளவில்லை. ராம சேவையிலுள்ள விபீசனன் தன் தமையன் இராவணனுடைய சொற்படி நடந்து கொள்ளவில்லை. கடவுள் (**உண்மை**) நாட்டம் ஒன்றில் மட்டும் பெற்றார் உற்றார்களை ஒருவன் மீறிப் போகலாம். அர்ச்சுனனுக்கு கீதையை உபதேசித்த கண்ணன், புலனடக்கம் இல்லாதவர்களுக்கும், பக்தி இல்லாதவனுக்கும், தொண்டு புரியாதவனுக்கும் என்னை (தொழில்) இகழ்பவனுக்கும் இப்பேருண்மையை இயம்பாதே என்றான். இவர்கள் சரியான விளக்கம் தெரிந்து கொள்ளாது உலக ஆசைகளை நிறைவேற்ற இவ்வுண்மைகளை முறைதவறிப் பயன் படுத்துவார்கள். மனத் தூய்மையும், ஞான வேட்கையும், சிரத்தையும் ஒருவனிடம் அமைந்திருந்தால்தான் அவர் பேருண்மைகளை தெளிவாகக் கிரகிக்கமுடியும். ஆன்மாவைப் பற்றிக் கேட்பவர்கள் பலர் அதை அறியமுடியாத நிலையில் இருக்கிறார்கள் என உபநிடதங்கள் கூறுகின்றன.

இயற்கையில் உள்ள ஜடசக்தி சித் சக்தியாக மாற முடியும். சூரியனின் வெப்பமும் வெளிச்சமும் ஜடசக்தியின் கூறுகள். அவை இரண்டும் உயிரைப் பேணுகின்றன. அச் செயலின் வாயிலாக அது சக்தியாக மாறுகிறது. இச்சக்தியின் சேர்க்கை விகிதாசாரக் கூடுதல் குறைவுகள் உயிர்களில் இன்ப துன்பமாகவும், விருப்பு வெறுப்பாகவும், காம குரோதமாகவும் அமைகிறது. இவை இயற்கைச் சக்திகளின் கூறுகள். ஐம்பொறிகளை தம்போக்கில் செயல்பட விடுவது போகம். இவற்றைக் கட்டியாளுதல் யோகம். யோகத்தினால் பஞ்சபூதச் சேர்க்கை விகிதாசாரம் கூடிக் குறைந்ததும்

மனிதன் காமம், குரோதம், துயரம், பொறுமை, பொய், பேராசை ஆகிய கீழ்ப்பண்புகளை அடக்கி அமைதி, பேரன்பு, ஞானம் ஆகிய தெய்வீக சக்தியாக மாற்றியமைக்க முடியும்.

வெப்பம் என்னும் சக்தியைக் கொண்டு நீரைக் கொதி கலனில் ஆவியாக மாற்றி அதனைப் பிடித்து அடைத்து வைக்கலாம். அப்படி அடைத்த ஆவியைக் கொண்டு இரும்புப் பாதையில் வண்டியை ஓட்டிச் செல்லலாம். இதே விதத்தில் மனிதனிடம் இயல்பாக அமைந்துள்ள ஆசை, சினம், பொறுமை, வெறுப்பு முதலிய கீழ்ப் பண்புகளை யோக சாதனத்தின் மூலம், நியாயம் உறுதி, உண்மை ஆகிய தெய்வப் பண்புகளாக மாற்ற முடியும். மேல்நிலை அடைய யோக சாதனம் இன்றியமையாதது. கொடிய விலங்கின் செயலைப் பெறுதலும், கீழோனாக இருப்பதும். மேலோனாவதும், தெய்வீகமாவதும் மனிதனுக்கு முடியும். தெய்வீகமானது ஒப்புயர்வற்ற பெரிய நிலையாகும். கடமை உணர்ந்து செயல்படல், உயிர்களை அன்போடு நேசித்தல், கடவுள்பக்தியை வளர்த்தல் ஆகிய பேரியல்புகளை கையாளுவதன் மூலம் தெய்வீகப் பண்புகளை அடையலாம். ஆனால் மனிதன் அறியாமையினால் உண்மைப் பொருளை (கடவுளை) புறவுலகமாகிய பிரபஞ்சத்தில் தேடித்திரிகிறான். பிறவிகள் பல எடுத்து தன் முயற்சியில் தோல்வியடைந்த பிறகு உண்மைப் பொருள் புறத்தில் இல்லை. அகத்தில் இருக்கிறது என்பதை அறிய வருகிறான். அந்த அறிவு உறுதி பெறுவதற்கேற்ப பஞ்சபூதச் சேர்க்கை மாறுபாடடைந்ததும் புறவுலகப் பற்று குறைகிறது. உண்மைப் பொருளை தன் அகத்தில் நாடுகிறான். அருள், தாகம், ஆத்ம பரிபாகம் அடைகிறான். அத்தகையவன் தன்மீது வைத்திருந்த பற்றுதலும், உலகத்தின்மீது வைத்திருந்த பற்றுதலும், தெய்வப் பற்றாகத் திருந்தியமைகின்றது. சாதனையின்மூலம் தன்னைப் பர சொரூபமாகத் திருத்தியமைத்து இறுதியில் பரம்பொருளில் ஒன்றுபட்டு முக்தியடைகிறான்.

சிசு கர்ப்பத்தில் இருக்கும்பொழுது கல்வி ஆரம்பமாகி விடுகின்றது என்பதை நாம் நன்கு அறிந்திருக்க வேண்டும். கர்ப்பத்தில் சிசு உருவாகிக்கொண்டு வரும்பொழுது தாயின்

எண்ணம் மறைமுகமாகச் சிசுவுக்கு உதவுகிறது. தெய்வப் பண்பு, பேரியல்பு படைத்தவளாகத் தாய் இருந்தால் அக் குணம் சிசுவுக்கும் அமைகிறது. கீழ்ப்பண்பு உடையவளாய் இருந்தால் அக்குணம் அமைகிறது.

இயற்கைத் தாய் அமைத்துள்ள பஞ்சபூதச் சேர்க்கை விகிதாசார இயற்கை நியதியிலிருந்து மனிதன் பிசகுவானுல் அக்கணமே அதற்குரிய தண்டனை கிடைத்துவிடுகிறது. பொய் சொல்லக்கூடாது என்பது இயற்கையின் திட்டம். அது மனிதன் போட்ட திட்டமன்று. பொய் சொல்லுகிற அக்கணமே பஞ்சபூதச் சேர்க்கை விகிதாசாரம் மாறுனதும் மனச்சாட்சி கெட்டுப் போகின்றது. நாம் எப்பொழுதெல்லாம் மனச்சாட்சியை மீறி நடந்து கொள்கின்றேமோ அப்பொழுதெல்லாம் பஞ்சபூதச் சேர்க்கையில் மாறுதல் ஏற்பட்டு சீர்கேடு அடைகின்றேம். சீர்கேடு அடைவது நமக்குத் தெரியும். அது மற்றவர்களுக்குத் தெரியாது. உடல் அமைப்பில் முற்றும் வளர்ச்சியடைந்த அமைப்பு மனித அமைப்பாகும். மனிதப் பிறவி பெற்றபின் மனிதப் பிறவிக்கேற்ற கடமையை உணர்ந்து செய்யாமல் பஞ்சபூதச் சேர்க்கை விகிதாசாரத்தை மாறுபடும்படி செய்வானுகில் வாழ்க்கையை வீணுக்கியவனுகிறுன்.

விலங்கு நிலையிலுள்ள மக்களை மனித நிலைக்கும், மனித நிலையிலுள்ள மக்களைத் தெய்வ நிலைக்கும் உயர்த்துவதே தமிழ்த்தாய் செய்யும் மறுமலர்ச்சியாகும். நாகரீகம் படைத்த ஒவ்வொரு நாட்டிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் உலக ஆசையில் மூழ்கிக் கிடக்கின்றுர்கள். பணத்தில் அவர்கள் மயங்கிக் கிடக்கின்றுர்கள். பணத்திலும் போகத்திலும் உள்ள மயக்கத்திலிருந்து விடுபடுவதற்குரிய போதனையை எதிர்பார்த்து ஏங்கிக்கொணடிருக்கிறுர்கள்.

தற்கால உலகம் பணத்தைத் துதி செய்து கொண்டிருக்கிறது. சமூக இயக்கங்களில் உள்ளவர்கள் பலர் வேதாந்தம்தான் சமூகததுக்கு நலன் செய்யும் என்பதை அறிகிறுர்கள். இவ் இயக்கங்கள் யாவும் ஆன்மீக மயமாக்கப்படும் பொழுதுதான் அவை உயர்ந்த நலனைத் தரும் என்பதை

யும் அறிகிறார்கள். நம்நாட்டில் ஏதாவது பணி நிகழ வேண்டுமாயின் அப்பணி ஆன்மீக மயமாக்கப்பட வேண்டும். கலியுகத்திற்கு கருமமே சிறந்த அறமாகும். கருமத்தினால் பஞ்சபூதச் சேர்க்கை மாறுபடாமல் சித்தசுத்தி செய்து கொள்ளாதவர்கள் ஆன்ம ஞானத்தைப் பெறமுடியாது. ஆகவே அறநெறி உணர்வை எல்லாக் குழந்தைகளுக்கும் புகுத்த வேண்டும். ஆபாசம் உள்ள சினிமாப் படங்களை, பாடல்களைத் தடை செய்ய வேண்டும். குழந்தைகள் அவற்றைக் கேட்க அனுமதிக்கக்கூடாது. பக்தி, வீரம். நீதிக் கருத்துடைய பாடல்களை இசையுடன் பாடச் செய்ய வேண்டும். நம் இதிகாச புராணங்களில் உள்ளவற்றை புரியுமளவு சிறு தமிழில் கூறவேண்டும். தனியார் நடத்தும் பாடசாலைகளில் ஓரளவு ஒழுங்கு கட்டுப்பாட்டைக் காண்கிறோம். அரசு நடத்தும் பாடசாலைகளில் ஒழுங்கு, கட்டுப்பாட்டைக் காண முடிவதில்லை. அரசு பாடசாலைகளில் ஆசிரியர்கள், மாணவர்கள் பொறுப்புணர்ந்து கடமையுடன் செயல்படுவது குறைவு. அறநெறி உணர்வு கூடினால் அவர்களும் கடமை உணர்ந்து செயல்பட முடியும்.

ள—

கடவுளை (உண்மை) நினையாதவன் சாவு வருகிறபோது கடவுளை நினைக்கிறான். கண்ணிலே நீர் வருகிறது. மனைவி மக்களைப் பிரிய முடியாமல் அழுகிறான் என நாம் நினைக்கிறோம். உண்மை அதுவல்ல. உண்மையான இறைவனை ஆயுள் உள்ள பொழுது உணரவில்லையே என்றுதான் அப்பொழுது அழுகிறான். பெண்ணும் பொருளும் போகமும் கைகூடிவிட்டால் அவன் கடவுளை நினைப்பதற்கு நேரம் ஏது. உண்மையான அறநெறியை சிந்திக்க நேரம் எங்கே அவனுக்கு.

எட—

# உண்மைக்கு மாருய் நடவாதே

"அவுணர் குடிகெடுத்த ஐயா எமைக் காப்பாற்றுவதில் ஏன் இந்தத் தயக்கம்?" இக் கேள்வியைத் திரும்பத் திரும்பச் சிந்திக்க வேண்டும். பொய்யுள்ள அவுணர்களைத் தண்டித்தாய் ஆகவே பொய் பேசுபவர்களைத் தண்டிக்கும் ஆற்றல் உனக்கே யுரியது. எம்மைக் காப்பாற்று என்று சொல்வதால் அதாவது நாமும் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கிருேம். ஏன் அனு பவிக்கிருேம். இதை ஆராய நாம் விரும்பவில்லை. எம்மைக் காப்பாற்றுவதில் தயங்காதே என அலறுகிருேம். நல்லூர் சம் பவங்கள் தினசரி பத்திரிகைகளில் வெளியாகின்றன. கொடி யேற்றத்தன்று 8 பெண்கள் சங்கிலி காணுமல் அதை அணிந்த பெண்கள் அடைந்த திடீர் மனமாற்றம், தேர்த் தினத்தன்று மூன்று தாலிக்கொடி, ஒன்பது சங்கிலி காணுமல் அப் பெண் கள் அடைந்த திடீர் மனமாற்றம், தீர்த்தத் தினத்தன்று இளை ஞர்கள் தண்ணீர் வாரி இறைத்ததால் திடீரென இளம் பெண் கள் அடைந்த மனமாற்றம். நீர்வேலி அச்செழு அம்மன் கோயி லின் கும்பாபிஷேக எண்ணெய் சாத்தும் வைபவத்தில் பஞ்ச பூதச் சேர்க்கை மாறுபட்டு இடம்பெற்ற திடீர் மனமாற்றம் இவைகளை அறிகிருேம். மூலகாரணத்தை ஆராய மறுக்கிருேம். தெரிசனம் செய்யப் போகும்போது இவ்விதம் நேரலாமென எண்ணவில்லை. இதற்கும் ஏதும் காரணமிருக்குமோ என ஆராய முயலவில்லை. இதே விதமாகவே நெடுக நடப்பதை விரும்புகிருேமா? கலியுக தர்மம் கருமத்தில்தான் தங்கியுள் ளது. கலியுகக் கடவுள் ஞானமுருகன் எனக் கதைக்கிருேம். ஞான வாழ்வு என்ருல் என்ன என்பதைப்பற்றி சரியான விளக் கம் பெற முடியவில்லை. ஞானம் என்ருல் வாழு வாழவிடு என்பதாகும். வாழு என்ருல் உண்மையான உரிமைகளுடன் வாழு என்பதாகும். உண்மைக்கு மாருய் நடவாதே என்ப தாகும். வாழவிடு என்ருல் மற்றைய எவ்வுயிர்க்கும் இடரில்லா மல் உண்மையாய் வாழ வழிவிடு என்பதாகும்.

காலையில் எழுந்தவுடன் முதலில் மலசலம் கழித்து புதுத் தொழில் ஆரம்பிக்க ஆயத்தமாகிருேம் நேற்றைய தொழில் பாட்டால் ஏற்பட்ட கழிவுகளை நீக்குகிருேம். அடுத்து பல்

விளக்கி முகம் கழுவுகிறோம். நாக்கைக் காப்பதற்காக காவல் அரணான பல்லைச் சுத்தம் செய்கிறோம். அடுத்து எமது சரீரத்தின் அகப்பொருள் அமைந்த ஆறு வாயில்களையும் கழுவி (மூக்கு, கண், செவி) அன்றைய தினத்தை நல்வழியில் செயற்பட ஆயத்தம் செய்கிறோம்.

ஆறு வாயில்களும் கழுவி முடித்து விபூதி தரிக்க வருகிறோம். விபூதியைத் தரிக்கும்போது எமது ஆத்மாவின் நிலை என்ன என்பதை எண்ணுவதில்லை. எமது உடலின் முடிவு இந்த நீறான விபூதியே. ஆகவே நாம் என்னதான் தலைகீழாய் செயல்பட்டாலும் முடிவு இந்த நீறாகும் உண்மையே. நீறாகும் நாம் அகங்காரமின்றி நடப்பதற்காக ஒவ்வொரு கணமும் நினைப்பதற்காகவே திருநீறு பூசும் பழக்கத்தை முன்னோர்கள் ஏற்படுத்தி விபூதி வாங்கும் போதும் தரிக்கும் போதும் உண்மையை வணங்கும் வழக்கத்தை ஏற்படுத்தினார்கள். அத்துடன் விபூதியை பிரதானமாக சிரசாகிய அறிவுக் கங்கையுடைய நெற்றியிலே இடும் வழக்கத்தை பழக்கப்படுத்தினார்கள். சிரசிலேயுள்ள மூளைக்கு இத்திருநீற்றின் சக்தி சென்று உடலைப் பக்குவப்படுத்தி உள்ளத்தையும் பக்குவப்படுத்துமென விரும்பினார்கள். அன்றைய வாழ்க்கையில் உண்மைக்கு மாறாய் எள்ளளவும் செய்யமாட்டோம் என விரும்பி "சிவ சிவ சிவ" என திருநீறு தரித்த நாம் சில நொடியில் மாறான வகையில் செயல்படுகிறோம். "சிவ – உண்மை" இச் செயல்களிலான கதைகள் வார்த்தைகள் வாயில் வந்ததும் பஞ்சபூதச் சேர்க்கையை மாறுபடுத்தி எமது மூளையிலுள்ள ஆன்மாவில் பதிவாகின்றன. உண்மைக்குரிய குறியீட்டுப் புள்ளிகள் போல பொய்க்குரிய குறியீட்டுப் புள்ளிகளும் ஆன்மாவில் உடனுக்குடன் பதிவாகின்றன. பஞ்சபூதச் சேர்க்கை விகிதாசாரம் மாறுபட அதற்குரிய பலன்களின்படியே எமது வாழ்க்கையின் பலாபலன்கள் அமைகின்றன. எந்த விதியையும் நோவதில் பலனில்லை. இந்தப் பஞ்சபூதச் சேர்க்கை மாறுபட்டதால் விளையும் பலன்களை எந்த விஞ்ஞானத்தாலோ மந்திர தந்திரங்களாலோ மாற்றமுடியாது என்பதை உணரவேண்டும். நாங்கள் முன் நடந்த செயல்களை யோசிக்கும்போது முன்பதிவு செய்யப்பெற்ற நினைவுகள் உடன் வெளிவருகின்றன. முன்பதிவு இருப்பதால் எவ்வளவோ விசயங்கள் எம் ஆத்மாவில் பதியப்பட்டுள்ளன என்பது விளங்கும்.

எங்களின் கணக்கிலடங்காப் பதிவுகள் எவ்வாறு நடைபெற் றன? எவ்வாறு நிலைத்தவுடன் வருகின்றன? எவ்வாறு சில வேளை வரப் பிந்துகின்றன என்பதை ஆராய்ந்தால் இவற்றின் பதிவுகள் எவ்வளவு நுணுக்கமாக நடைபெற்றிருக்கின்றன, நடைபெறுகின்றன என்பதை உணரலாம். உண்மை எப்படி பதிவு செய்து பின் வருகிறது. பொய் எப்படிப் பதிவு செய்து பஞ்சபூதச் சேர்க்கை விகிதாசாரத்தை மாறுபடுத்தி சிக்காக வரப் பார்க்கிறது என்பது நமக்கு விளங்கும். இருந்தாலும் சமாளித்து பின்பும் சிக்காக்குகிறோம். பிரச்சனைகள் வளர்கின் றன. நமக்கும் சந்ததியினர்க்கும் அவிழ்க்க முடியாத சிக் காக்கி வைத்து நீருகிப் போகிறோம் இவற்றினால் நாம் அடைந்த பயன் என்ன? அடுத்த பிறப்பில் ஆத்மாவில் பதி யப்பெற்ற பஞ்சபூதச் சேர்க்கை விகிதாசார மாறுபாட்டுக்கு ஏற்ப நல்வினை, தீவினைப் புள்ளிகளின் பலனை அனுபவிக்கப் பிறப்பெடுக்கிறோம். இவற்றை அனுபவித்து முடிக்க வேண்டிய காலத்தில் பொறுமையுடன் அனுபவித்து முடியாமல் இன்னும் பொய்களை வளர்த்து அசுரப் பிறப்பெடுக்க ஆயத்தமாகிறோம். வினைப் பயன்களைப் பொறுமையுடன் அனுபவித்து முடிக்க விரும்பி கஷ்டங்களை அனுபவிக்குமிடத்து பஞ்சபூதச் சேர்க்கை விகிதாசாரம் ஒழுங்காகி முன்வினைப்பயன் புள்ளிகள் அழிந்து போகின்றன. சிக்கன வாழ்க்கையை கையாண்டு சமத்துவத் துடன் உடல் வேலை செய்து பழக்கப்பட்டால் வினைப்பயன் அற்றுப் போவதுடன் புதிதாகவும் பொய் கூறவேண்டிய சந் தர்ப்பம் ஏற்படமாட்டாது. ஆத்மா இறைவன் திருவடியடைய எவ்விதத் தடையுமில்லை. குற்றவாளியான வழக்கில் தெண்டப் பணம் கட்டியதும் மன எண்ணத்தில் நான் குற்றப்பணம் கட்டி விட்டேன் என்று கூறுவான். ஆகவே குற்றம் செய்ததையும் தெண்டம் கட்டியதையும் மனம் ஏற்று இனிமேல் குற்றம் செய் யக்கூடாது என உள் மனதுக்கு கட்டளை இடப் பெறுகிறது. குற்றம் செய்யாதவன் குற்றவாளியாக வருமிடத்து பொய் வழக்காடியவரின் ஆத்மாவின் எண்ணப் புள்ளியில் பஞ்சபூதச் சேர்க்கை மாறுபட்டு இத்தீவினைப் புள்ளிகள் இடம்பெற்று அதற்குரிய சூழ்நிலை வரும்வேளை அதை அனுபவிக்க வேண்டி ஏற்படுகிறது. இப்படியாக எமது காலத்தில் தீவினை செய்து இறந்து பிறந்தவர்கள் பஞ்சபூதச் சேர்க்கை விகிதாசார மாறு

பாட்டால் முன்சென்ம வினைப்பயனை அனுபவித்ததை நன்ருக அறிந்திருக்கிறோம். தீவினை செய்தவர்கள் இறக்கும் காலத்தில் அடைந்த கஷ்டங்களையும் அறிவோம். ஆகவே இப்படிக் கண்டு கொண்ட பின்பும் ஆன்மாவைப் பற்றி அறியாமல் பொய்கூறி அதிக லாபமடைய விரும்புகிருேம். அதிக லாபமடைய விரும்பிச் செய்யும் செயல்களில் நஷ்டங்கள், அழிவுகள், வெள்ள அழிவு, சூருவளி அழிவு வரும்போதும் இவை எமது முன் வினைப் பயனுயிருக்கலாம் என எண்ணுவதில்லை.

கண்ணகி கோவலன் கதை படித்திருக்கிறோம். கண்ணகி எப்படித் தெய்வமாளுள்; கோவலன் ஏன் தெண்டிக்கப் பெற்ருன். மாதவி ஏன் தெண்டம் அடையவில்லை? பாண்டியன் செங்கோல் ஏன் வீழ்ந்தது? நன்ருக ஆராய வேண்டும்.

கண்ணகி தனது கணவன் கோவலனை தெய்வமாகக் கருதினுள். மாதவி வீட்டில் கோவலன் இருந்த போதும் மனஞ்சீறவில்லை. தன் வியாபாரக் கடமையிலிருந்து தவறிய கோவலன் பணமிழந்து கண்ணகியிடம் வருகிருன். கண்ணகி தனது தெய்வமான கோவலனுக்கு பணம் கொடுப்பதற்காக தன்னிடம் வேறு ஏதும் இல்லாமையால் காற்சிலம்பில் ஒன்றைக் கொடுக்கிருள். காற்சிலம்பை விற்கப்போன கடமை தவறிய கோவலன் தண்டிக்கப்படுகிருன். இங்கு மாதவியும் எக் குற்றமும் செய்யவில்லை. தனது தொழிலிலும் உண்மையைக் கொண்டு நடந்தாளேயன்றி கோவலனை ஏமாற்றவில்லை. இக் காரணங்களால் அவள் தண்டிக்கப் பெறவில்லை. கண்ணகி தன் கணவனே தெய்வமெனக் கொண்ட கற்பின் வலிமையால் நியாயம் கேட்கிருள். தனது உண்மையை அழித்து விட்டாயே. அகங்காரம் உனது அறிவுக் கண்ணை மறைத்துவிட்டது என்று கூறி நீதியைச் செலுத்த முற்படுகிருள். பாண்டியன அரசை உண்மைப் பொருளான அக்கினியால் அழிக்கிருள். நியாயம் ஆராய்ந்து நீதியைச் சரியான முறையில் வழங்கத்தவறி சுற்றவாளியைக் குற்றவாளியாக்கிய செங்கோல் சில கணங்களில் அழிந்து வீழ்கிறது.

இங்கு நாம் உணரவேண்டிய அகப்பொருள் நிலை பல. தனது தொழில் கடமையிலிருந்து விலகிய கோவலன் தெண்டிக்கப் பெற்றமை கணவனைத் தெய்வமாகப் போற்றும் கண்ண

கியின் செயல்திறமை. (உண்மை என்றும் அழியாது என்பதை உணர்த்துகிறது.) ஆராய்ந்து கருமம் செய்யாதவனின் செங்கோல் வீழ்ந்தமை அரசனின் காணமல் போன சிலம்பு இது எனக்கூறி உண்மையாளனைப் பொய்யாக்கிய பத்தன் முதல் மந்திரிவரை சகலரும் ஒரு நொடியில் அழிந்து முடிந்தமை. (உண்மை கொண்டு நடப்பவர் தான் நினைத்ததை அடைவர் என்பது நிரூபிக்கப் பெறுகிறது.) அத்துடன் டாம்பீக வாழ்வு வாழ்ந்த கோவலன் சில நேரங்களில் அழிக்கப் பெற்றமை டாம்பீக வாழ்வு கொண்டுவரும் தாழ்வு என்பதை உணர்த்துகிறது. இங்கு இன்னும் ஒன்றை நாங்கள் உணர வேண்டும். கண்ணகியின் கணவனை உண்மைப் பொருள் காப்பாற்றியிருக்கலாம். கண்ணகியின் கற்பின் வலிமை அவளுக்கு வேலை செய்யுமேயன்றி கணவனுக்கு வேலை செய்ய மாட்டாது. ஒருவருக்காக ஒருவர் வினைப்பயனை அனுபவிக்க முடியாது. தாம் தாம் செய்த வினை தாமே அனுபவிப்பார். அவரவருக்குரிய பஞ்ச பூதச் சேர்க்கை விகிதாசாரத்துக்கு ஏற்பவே அவரவர் வினைப் பயன் அமையும்.

இரவு நேரத்தில் ஆகாயத்தில் நட்சத்திரங்களைக் காண்கிறோம். பகலில் அவை தெரிவதில்லை. அதனால் வானில் நட்சத்திரங்கள் இல்லை என்று சொல்லலாமா? அஞ்ஞானத்தினால் உன்னால் இறைவனைக் காண முடியவில்லை என்றால் இதற்காக இறைவனை இல்லை என்று சொல்ல முடியுமா?

— *இராமகிருஷ்ண பரமஹம்சர்*

★ ★ ★

*மகா மந்திரங்கள் மூன்று :*

கடவுள் (உண்மை) மேல் அன்பு வைத்திருங்கள்.
பாபத்திற்கு அஞ்சுங்கள்.
சமூகத்தில் நல்லொழுக்கத்தைக் கடைப்பிடியுங்கள்.

— *சாயிபாபா*

௮—

# மனதில் உறுதி வேண்டும்

இன்றைக்கு சுமார் 40 வருடங்களின் முன் 1940 காலங்களில் உள்ள அறிவுக்கும் இன்றைய அறிவுக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் உண்டு. அதற்கும் முன்னைய காலங்களில் மக்கள் மிகவும் அறிவீன நிலையில் இருந்துள்ளதாக நாங்கள் கருதுகிறோம். அக்காலங்களில் மக்கள் அச்சம் காரணமாகவும், அகங்காரம் காரணமாகவும் மனித மங்கையர்களைக் கடவுளுக்கு பலி கொடுத்து வந்தார்கள். காலஞ் செல்லச்செல்ல அறிவு கூட அப்பழக்கம் சமயக் கொள்கைக்கு முரணானது எனக் கருதி ஒருசிலர் கைவிட்டதும் மற்றையோரும் அப் பழக்கத்தைக் கைவிட்டனர். இன்றும் இருண்ட கண்டங்களில் அப்படி இருப்பதாக அறிகிறோம். இக்காலம் நீங்க மக்கள் ஆடு. மாடு, கோழிகளைப் பலி கொடுக்க முற்பட்டார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் இவை பலி கொடுக்கும் பல கோயில்கள் இருந்ததை எங்கள் காலத்தில் கண்ணாரக் கண்டோம். பேய், முனி, பிசாசு இவை உலவுவதையும் சிலர் சொல்லக் கேட்டு அவ்வழியே எமது மனநிலையும் பயிற்றுவிக்கப் பெற்ற மன நிலையில் இருந்து வந்தோம். பலி காரணங்களால் எங்கள் கிராமங்களில் சச்சரவுகள் இருந்ததும் சாதிச் சண்டைகள் இருந்ததும் எமக்குத் தெரியும். ஆனால் இப் பலியை நிறுத்துவதற்கு எடுத்த முயற்சிகள் அறிவு விருத்தி அடையாத நிலையில் இன்றும் சில இடங்களில் அப்பலி நடப்பதை அறிய வருகிறோம். பேய், முனி, பிசாசு இவைகள் இன்று இருக்குமிடம் அறியமாட்டோம். பேய், முனி இரவு சாம வேளைகளில் பிரயாணம் செய்த கதைகளையும் அவைகள் இருக்கும் மரங்களையும் கூறக்கேட்டு அச்சமடைந்து இறந்துபோனவர்களையும் நன்றாய் அறிந்திருந்தோம். ஆனால் தற்சமயம் இக்கருத்துக்கள் எவருக்கும் மிகமிகப் பெரிய அறிவீனம் என்பது நன்றாய் விளங்குகிறது. பலி கொடுக்கும் பழக்க

மும் மிகவும் பெரிய அறிவீனம் என்பது வரும் கிட்டிய காலங்களில் முற்றாக விளங்கி அச்செயல் அற்றுப்போய் விடும். ஆகவே அறிவு என்பதற்கு எல்லையில்லை. எமக்குத் தெரியும் அறிவு மிகவும் சொற்பமே. ஏன்? எப்படி? என்ற கேள்வியை எழுப்புவதின் மூலம் அறிவு விருத்தியடைகிறது. அறிவைக் குறுக்குவழியில் லாபமடைய செயல்படுத்துவ தால் பஞ்சபூதச் சேர்க்கை விகிதாசாரம் மாறுபட்டு முன் ஞேர்களின் முதுமொழிகள் மீறப்பெறுகின்றன. அதற்குரிய பலன்களை அனுபவிக்கிறோம். முன்னோர்கள் வகுத்துவைத்த கருத்துக்களைத் தவறான பாதையில் பாவிக்கிறோம். சமய நெறிகள், சோதிடக் கருத்துகள் முழுவதும் முற்றும் துறந்த முனிவர்களாலும், நாயன்மார்களாலும், ரிசிகளாலும் வகுக்கப்பெற்றுள்ளன. இவை தேவ வாக்குகள் ஆகும். இவை தெய்வப்பண்பு நிலைக்குரிய பஞ்சபூதச் சேர்க்கையை உண்டாக்குகின்றன. இவற்றின் கருத்துக்களை மறைபொரு ளாய் வைத்து சுயநலத்துக்கு பயன்படுத்துவோரையே மிகு தியாகக் காணுகிறோம். உட்பொருளை விளங்கிக் கொள்ள காலங் காணுமையினால் சுயநலவாதிகளின் கருத்துக்களை முழுதாக ஏற்று குறுக்கு வழியில் லாபமடையும் வழிகளை வகுத்து வருகிறோம்.

மனிதனுடைய நிலை, உள் ஆத்மீக வளர்ச்சி, அவனின் வயது, உடல் நிலை, உட்கொள்ளும் உணவு, சுற்றாடல், பழக்கவழக்கங்கள், செய்தொழில் ஆகியவற்றில் தங்கியுள் ளன. எனவே மனிதனின் வளர்ச்சி சீரான நிலையை அடையாவிட்டால் அவன் பிரச்சினைக்குரியவன் ஆகிறான். பஞ்சபூதச் சேர்க்கை விகிதாசாரம் மாறுபாடடைகின்றன. பிரச்சினைகள் விரிவடைகின்றன.

பிறப்பு இறப்பு இரண்டும் இயற்கையானது. இரண்டுக்கும் இடைப்பட்ட காலத்தைச் சீராகவும், சிறப்பாகவும் வளர்ச்சிக் குரிய வழியில் அமைப்பதற்கு போதிய அறிவும் அனுபவமும் பெற்றவர்கள் பரந்த நோக்குடனும், கடமையுணர்ச்சியுடனும்

சேவை மனப்பான்மையை அடிப்படையாகக் கொண்டு வேதனம், அறியாமை, அனுபவமின்மை ஆகியவற்றல் உந்தப் பட்டும் செயற்பட்டும் வரும் சிறர்களுக்கு வழிகாட்டிகளாக அமைவதும் நல்லதொரு மனித குலம் உருவாக வழிகாண உதவுவதும் சாலவும் சிறந்ததாகும்.

உலகவாழ்வில் மனிதர்களாகிய நாம் துன்பமுறும் நமது சகமனிதர்களுக்காகப் பணியாற்றப் புறப்படும்போது உள்ளத் தூய்மையும் இலட்சியத்தில் உறுதியும் கொள்ள வேண்டும் என்பதை யேசுநாதரின் புனித வாழ்வு எமக்கு எடுத்துக் காட்டுகிறது. தனிமனித வாழ்வில் சுயநலமும் சுயவிளம்பரமும் தன்முனைப்புப் பெறும்போது இலட்சியங்கள் இடறுண்டு போகின்றன. மன உறுதி தளர்ந்து போகும்.

முற்றும்.

ஒருவன் கள் குடித்தாலும், கொலை புரிந்தாலும், களவு செய்தாலும் நற்றவம் செய்து உய்வு பெறலாம். ஆனல் நன்றி கொன்ற பாவத்துக்கு மட்டும் உய்வு கிடையாது.

— கந்தபுராணம்

★ தொழில் செய்யும் கரங்கள் செபம் செய்யும் உதடுகளைவிடப் பரிசுத்தமானவை.

★ ஞான வளர்ச்சி திறமையுடன் தொழில் புரிதலைத் தோற்றுவிக்கிறது.

| | |
|---|---|
| **விநாயகர்** | 1, அறிவு:- உண்மைப் பொருளின் ஒளிக்கதிர் |
| | 2. அஞ்ஞானம்:- ஒளிக்கதிர் ஊடுருவாத நிலை |
| | 3. அகங்காரம்:- ஒளிக்கதிர்களின் செயற்பாடு எதிர்ப்பு |
| **சிவன்** | 4. ஆத்ம சொரூபம்:- உண்மைப் பொருளின் காட்சி உருவம் |
| | 5, இச்சாசக்தி:- ஆசை அனுபவம் |
| **லக்ஷ்மி** | 6. இந்திரியம்:- மனது அனுபவிக்கும் பொருள் |
| | 7. உணர்வு:- அர்த்தம், கருத்து |
| | 8. உணர்ச்சி:- இணங்காத கருத்து வேகம் |
| | 9. ஓங்காரம்:- ஈசுவரபிரதிமை |
| | 10, ஸ்தூலசரீரம்:- உடம்பின் வெளி அமைப்பு |
| | 11. கொள்கைகள்:- மனிதசமயச் செயல் வாய்பாடு |
| | 12. கோட்பாடு:- மனிதசமயப் பழக்க வாய்பாடு |
| | 13. சலனம்:- இயக்கம் |
| | 14. சக்தி:- இயக்கும் பொருள் |
| | 15. சடப்பொருள்:- உயிர்களின் உடலமைப்பு |
| | 16. சங்கற்பம்:- பாவனை, நடிப்பு மனதில் வரும் எண்ணம் |
| **வயிரவர்** | 17. சமஸ்காரம்:- கருமங்கள், சமாச்சாரம் |
| **வீரபத்திரர்** | 18. சிந்தனை:- சாத்விக சுழற்சியுள்ள ஒளிக்கதிர் |
| **சரஸ்வதி** | 19. சித்தம்:- சமாச்சாரம் புதைந்து கிடைக்குமிடம் ஒளிக்கற்றை |
| **உமாதேவி** | 20, சுவாசசக்தி:- பிராணனை இயக்கும் பொருள் |
| | 21, சுவானுபூதி:- சொந்த அனுபவம் |
| | 22, சேதனப் பொருள்:- புத்தி ஒளித்தூசு |
| **முருகன்** | 23. ஞானம்:- நடுவுநிலை வேக ஒளிக்கதிர் |
| | 24, தன்மாத்திரை:- ஞான ஒளிக்கதிர் |
| | 25, தத்துவம்:- அமைப்பு |
| | 26. தியானம்:- ஒளிக்கதிர்களை ஒன்று சேர்த்தல் |
| | 27. பாரமார்த்திகம்:- நன்னெறி முறை |

28. பிராணன்:- இயங்கும் உயிரின் சுவாசசக்தி இயக்கங்களின் மூலம்

29. புத்தி:- உயிர்களில் தோன்றும் வெவ்வேறு வேக எண்ணிக்கையான ஒளித்துகள்

30. புருஷன்:- ஆத்மா

31. பொறிகள்:- கற்பனை

32. மனம்:- சுழற்சியற்ற ஒளித்துகள்

33. மனோதத்துவம்:- மண அமைப்பு, ஒளிக் கிரகண அமைப்பு

34. யோகம்:- ஒளிக்கதிர்களின் வேகங்களை நிரைப்படுத்தல்

விஷ்ணு

35. விருத்திகள்:- ஆன்மாவில் உண்டாகும் விதைகள்

36. விதை:- கற்பனைக்கு எட்டாத கோடானுகோடி விதமான பஞ்சபூதங்களின் சேர்க்கையால் உருவாக்கப்பெற்ற ஆத்ம மாத்திரை

37. யதாஸ்தானம்:- பழையநிலை, இருப்பிடம்

உனது நெஞ்சிற்கு துரோகம் செய்யாதே! மனச் சாட்சியின்படி நட. நிச்சயமாகவே உனக்கு வெற்றி உண்டாகும்.

— இராமகிருஷ்ண பரமஹம்சர்

* * *

உள்ளத்தில் உண்மை, வாயில் வாய்மை, செயலில் மெய்ம்மை காந்தியை மாணிக்கமாய்த் திகழச் செய்தன. காந்தியின் வாழ்வு ஆண்டவன் காட்சி கொடுத்ததாலோ கனவில் தோன்றியதாலோ உயரவில்லை.

# பகவத் கீதை

கட்டுப்பாடும் திட்டமும் உடைய சிறு சமூகங்கள் நன்கு முன்னேற்றமடைகின்றன. கட்டில் அடங்காத பெரிய சமூகங்கள் பிற ஆட்சிக்கு அடிமையாகின்றன. அல்லது சிறப்பும் சீருமின்றி தம்மைத் தாமே ஆண்டு வருகின்றன.

மனக்கிலேசம் அடைபவனுக்கு இம்மையும் இல்லை. மறுமையும் இல்லை. சிந்திப்பதும் சொல்லுவதும் செய்வதும் முற்றிலும் பொருந்தி ஒன்றுபட்டிருக்க வேண்டும். உற்றார் உறவினர் எனத்தோன்றும் உயிர்களெல்லாம் இடையில் வந்தவர்கள். கனவில் காணப்படுபவர் போன்று முன்பிருந்ததில்லை. பின்பு இருக்கப் போவதுமில்லை. எல்லாத் தொழில்களிலும் மனது நடுநிலை நிற்பது யோகம். உலகில் பிறந்ததுமுதல் ஒருவன் அனுபவிக்கும் நன்மைகளெல்லாம் பிறர் செய்த தியாகத்தின் பயனாகும். கணக்குப் பார்க்குமிடத்து மனிதன் உலகிலிருந்து நன்மைகளைப் பெறுவதைவிட அதிகம் உலகுக்கு எடுத்து வழங்க வேண்டும். பெறுவது பெரிது வழங்குவது சிறிதாயிருக்குமிடத்து அவன் கடன் பட்டவனாகிறான். ஏற்றுக் கொள்ளுதலிலேயே கண்ணுங் கருத்துமாய் இருப்பவன் திருடனாகிறான். தங்கள் பொருட்டே சமைக்கும் பாபிகள் பாபத்தை உண்கின்றனர். சமைத்த உணவை மற்றவர்களுக்கு முதலில் வழங்கிவிட்டு மிஞ்சியதை உண்பவன் மேலோன். தொழில் புரியாதிருப்பது உயிர்வாழாதிருப்பதற்கு ஒப்பாகிறது. முறையாகத் தத்தம் தொழில் புரியும்பொழுது அதன் மூலம் அவரவர் மேன்மை மிளிரும். கர்மம் செய்யாது வீணில் வாழ்வதைவிட பற்றுடன் கர்மம் செய்வது மேலானது. மற்றவர்களுடைய முன்னேற்றத்தைக் கண்டு மகிழ்கின்ற அளவு ஒரு மனிதன் தானே முன்னேற்றமடைகிறான். பிரகிருதியில் கட்டுண்டு கிடக்கும் பாமரர் பல சென்மம் எடுத்தவர்கள். அவர்கள் இயல்பைத் தடுப்பது வளர்ச்சியைக் கெடுப்பதற்கு ஒப்பாகும். அவர்களை இயல்புக்கு ஏற்ற வினையாற்றி முன்னேற்றமடைய தூண்ட வேண்டும். விருப்பு

வெறுப்பின் வசப்பட்டு தொழிலை மாற்றுவது பயன்படாத மனதின் போக்காகும். பயந்து தொழிலை மாற்றுபவன் ஓயாது செத்துக்கொண்டே இருக்கிறான். ஆசை பெருகப் பெருக பாவமும் பெருகுகிறது. மனிதனுக்கு வரும் கேடுக ளெல்லாம் ஆசையிலிருந்து வந்தவைகள்.

ஒரே நாளில் ஒரு மனிதனது ஆசை எத்தனை விதமாக வடிவு எடுக்கிறது என்பதை அவன் கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தால் விளங்கும். முதலில் இந்திரியங்களை முற்றுகை போட்டு கைப்பற்றிக் கொண்டால் எதிரியாகிய ஆசைக்கு இருப்பிடம் இல்லாது போய்விடுகின்றது. மனதின் தொழி லாகிய எண்ணத்துக்கு இந்திரியங்களின் தொழிலைவிட அதிக வியாபகமுண்டு. அதனிலும் பெரியது புத்தி. மனது சந்தே கம் கொள்கிறது. புத்தியோ மெய்ப்பொருளை நிச்சயிக்கிறது. ஆகையால் அது பெரியது. புத்திக்கும் எட்டாதது ஆன்மா. ஆசையானது இந்திரியங்களையும் மனதையும் புத்தியையும் பற்றி நிற்கும்போது துன்பமே அதிகரிக்கிறது. ஒவ்வோர் இன்பமும் இறுதியில் துன்பமாகப் பரிணமிப்பதை அவர்கள் நாளடைவில் அறிவார்கள். களை எடுத்தலும் நல்ல செடி களுக்கு உரம் போடுதலும் சேர்ந்து அமைவது சிறந்த கிரு ஷிகமாகும். உலகில் மனிதனுக்குரிய பஞ்சபூதச் சேர்க்கை வித்தியாசமடைந்து கெட்டவர்களுடைய கூட்டம் பெருகி விட்டால் அவர்களுக்கிடையில் தர்மம் தலையெடுக்காது. ஆகையால் யுத்தம் கொள்ளைநோய் பஞ்சம் வாயிலாக பக வான் துன்பத்தை ஊட்டுகிறார். துன்பம் ஒன்றே மக்களை சீர்திருத்துவதற்கு உற்ற உபாயம். மரணத்தின் வாயிலாக அவர்களில் பெரும்பான்மையோர் மறைந்திருப்பதும் அவ சியமாகிறது. சத்துவ குணத்தில் இருப்பவர்களை ஓம்புதலால் மூன்று குணங்களுக்கிடையில் உள்ள தராதரம் ஓரளவில் சமப்பட்டு விடுகிறது. கர்மத்துக்கு அதீதமானவன் சத்கர் மங்கள் யாவையும் செய்து வருபவனாகத் தென்படுகிறான். இவ்வுண்மையைச் சுவானுபவத்தில் அறிபவர்கள் தாங்களும் உலகில் வாழ்ந்து பிறவிப் பெருங்கடலை நீந்த வல்லவரா கின்றனர். மனதிலுள்ள ஆசை, அச்சம், சினம் என்ற அழுக்குகளை நீக்கினால் பஞ்சபூதச் சேர்க்கை வித்தியாச

மடைந்து அது ஈசுவரமயமாய் விடுகிறது. அறிவிலிகள் எது விரைவில் அகப்படுகிறதோ அதில் பற்றுவைத்து அதையே நாடுகின்றனர். சர்வேசுவரனை நாடுபவர்கட்கு பக்தி, ஞானம், முக்தி முதலியன சித்தியடைகின்றன.

அகங்காரம் உள்ளவர்களிடம் பஞ்சபூதச் சேர்க்கை வித்தியாசம் காரணமாக கர்மம் மனோவிகாரத்தை உண்டு பண்ணுகிறது. விவேகமுள்ளவன் அகங்காரத்தையும் ஆசையையும் விட்டுவிடுகிறானேயன்றி கர்மத்தை விட்டுவிடுவதில்லை. கர்மம் ஞான வளர்ச்சிக்கு துணைபுரிகிறது. ஞான வளர்ச்சி திறமையுடன் தொழில் புரிதலைத் தோற்றுவிக்கிறது. கர்மபலனில் ஆசையில்லாது தன் கடமை செய்பவர்க்கு அரசன் முதல் ஆண்டிவரை யாரையும் சார்ந்திருக்க வேண்டிய அவசியமில்லை. மனதுக்கும் வாழ்வுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. மனதில் உண்டாகும் பயம், காமம், குரோதம் ஆகிய கெட்ட விவகாரங்களுக்கு ஏற்றபடி பஞ்சபூதச் சேர்க்கை மாறுபாடடைந்து சுவாசப் போக்குவரவு தடுமாற்றமடைகிறது. அமைதி, அன்பு, மகிழ்வு ஆகிய நல்ல விருத்திகட்கு சுவாசத்தின் போக்குவரவு ஒழுங்காக நடைபெறுகிறது. சுவாசத்தின் போக்குவரவை ஒழுங்குபடுத்தினால் அதற்கேற்றபடி மனது தெளிவடைகிறது. வாய்வழியாக சுவாசித்தலாகாது. அச்சுவாச காரணத்தினால் நாடி நரம்புகளின் வலிவை இழந்து மண்டையிடி முதலியன உண்டாகின்றன. மனிதன் எத்தொழிலைச் செய்தாலும் தான் தனது என்ற சீவபோதத்தைத் துறப்பதே இயற்கையின் மேலாம் திட்டம். மனிதன் பொருளைப் பெருக்குவதால் கவலை அதிகம் உண்டாகிறது. ஓரளவுக்குமேல் திரவியம் பயன்படாது. ஞானம் பெருகிற அளவு சாந்தியும் மோட்சமும் கைகூடும். ஞானமில்லாதவர்கள் கர்மமதை முறைதவறிச் செய்து அதைப் பாபமாக்கி விடுவர். ஞானமுடையவர் அதே கர்மத்தை முறையாகச் செய்து புண்ணியமாக மாற்றுவதுமல்லாது கர்மபந்தத்தில் இருந்து விடுபடுகின்றனர்.

மனது ஆழ்ந்து எதை எண்ணுகிறதோ அதன் தன்மையைப் பெறுகிறது. சீரிய பொருளைச் சிந்திக்கும் மனது சீரியதாகிறது. தாழ்ந்ததை நினைப்பது தாழ்ந்ததாகிறது. உண்பதையே கடவுள் ஆராதனையாகச் செய்து பழகப்பழகப் போகமானது யோகமாக மாறிவிடுகிறது. தீனியில் வைத்த நாவாசையை அடக்காதவன் மற்ற ஆசைகளை அடக்க முடியாது. எல்லாப் பணிகளையும் கடவுள் பணியாகக் கருதிச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யும் பணிகளில் உண்மையை விலக்கிச் செய்ய முடியாது. ஈசுவரனுக்கு அர்ப்பணம் பண்ணிய கருமம் பிறவியை உண்டுபண்ணாது. மனைவி, மக்கள், பொன், பொருள் இவைகளுக்காக மக்கள் குடம் குடமாகக் கண்ணீர் சிந்துகின்றனர். ஆனால் ஞானம் வேண்டும்; அருள் வேண்டும்; உண்மை வேண்டும் என்று அழுபவர் யார்? நீ வாங்கிப் பிழைப்பவனாக வாழாது பெருங் கொடையாளியாயிரு. உன் கொடையை ஏற்றுக் கொள்பவர்களை எல்லாம் கர்வம் வராமல் இருப்பதற்காக இறைவன் சொரூபமாகக் கருதி நமஸ்காரம் செய். இன்பந் தரும் பொருள்களைப் பெற்று ஒருவன் களிப்புறலாகாது. களிப்புக்கு வசப்படும் மனது துன்பத்துக்கும் வசப்படக்கூடியது என்பதாகும். உறுதியான மனதே இன்பம் துன்பம் இரண்டையும் சமனாகப் பாராட்டுகிறது. பயம் மரணத்துக்கு ஒப்பானது. அச்சம் கலக்கத்தை உண்டுபண்ணுகிறது. கலங்கிய நீரில் பிம்பம் தெரிவதில்லை. தெளிந்த நீரில் பிம்பம் தெரிகிறது. கலங்கா நெஞ்சம் படைத்தவனே இறைவனைக் காணுகிறான்.

பயிர்த்தொழில் புரிவது, ஆடு மாடுகளை வளர்ப்பது, வியாபாரம் பண்ணுதல், தொழிற்சாலை நிறுவுதல் ஆகிய இவைகள் செல்வத்தை உண்டுபண்ணும் தொழில்களாகும். சுதந்திர வாழ்க்கை வாழ்ந்து செல்வத்தை பெருக்குபவர்கள் வைசியர்கள். இக்காலத்தில் புதிதாகத் தோன்றியுள்ள வக்கீல்களும், டாக்டர்களும் இடை அல்லது கடைத்தரமான வைசியர்கள். இவர்கள் சமூகத்துக்கு செல்வத்தை உண்டுபண்ணுபவர்கள் அல்ல; செல்வத்தை ஏற்பவர்களாம்.

தனதானியங்களை விருத்தி பண்ணலும், மூலப் பொருளைச் சேமிப்பதும், அவைகளைப் பயன்படும் பொருள்களாக மாற்றி யமைப்பதும், வாணிகத்தின் மூலம் பங்கிட்டுக் கொடுத்தலும் வைசிய தர்மமாகும். இக்காலத்துக் குமாஸ்தாக்களெல்லாம் சூத்திரர்களாம். நல்ல மனப்பான்மையுடன் ஆசிரிய வேலை செய்பவர்கள் பிராமண கர்மம் செய்கிறார்கள். உடல் வாழ்க்கை ஒன்றில் மட்டும் கருத்து வைத்திருப்பவன் சூத்திரன். அதற்குமேல் மேலான சிந்தையும் செயலும் உடையவன் செய்தொழிலுக்கேற்ப வைசிய, சத்திரிய, பிராமணன் ஆகிறான். வைசியன் புற உலகில் சக்திக்குச் சின்னமாயிருக்கும் பொருளைச் சேகரிக்கிறான். சமூகத்தில் அன்பு கொண்டிருந்தால்தான் அதனிடத்து நல் வாழ்க்கையை அவன் வழங்க முடியும்.

எத்தொழிலைச் செய்தாலும் நல்ல மனநிலையுடன் அதைச் செய்தால் மனபரிபாகமடையலாம். ஒவ்வொரு சீவனும் அவனவன் தொழிலை முறையாகச் செய்வதன்மூலம் பிரகிருதியின் நடைமுறைக்கு நன்கு துணைபுரிகிறான். ஆகையால் அறிவுடைய மனிதன் எக்கருமத்தை நன்கு செய்ய முடியுமோ அதை ஈசுவர ஆராதனையாகச் செய்ய வேண்டும். ஈசுவர ஆராதனை வேறு, அவரவர் தொழில் புரிவது வேறு என்று பலர் எண்ணுகின்றனர். தத்துவம் அறியாதவரே அத்தகைய எண்ணம் கொள்ளுவர். தேகப் பயிற்சியையும் பொருள் சம்பாத்தியத்தையும் ஒரே தொழிலில் அடக்குவது சாத்தியம். தனக்கு வாய்த்த கருமத்தையே விடாது செய்வதால் ஸ்திரபுத்தி ஏற்படுகிறது. சுவாசிக்கும் போது காற்றிலுள்ள உயிர்கள் மடிகின்றன உண்கிறோம். மற்றொருவருக்கு அவ்வுணவு இல்லாது போகிறது. கருவி காரணங்களை ஒடுக்கித் தவம் புரிகிறோம். பிறர் உழைப்பால் வளர்ந்த நம் உடல் பிறருக்கு உழையாது போகிறது. ஆக தீங்கு இல்லாத கருமம் இயற்கையில் இல்லை. தேகம் தாங்கியுள்ள ஒவ்வொருவனும் ஏதேனும் ஒரு கருமம் செய்தே ஆகவேண்டும். ஆகையால் தன் இயல்புக்கு ஒத்த கருமம் ஏதோ அதைச் செய்வது முறை. ஒவ்வோர் உயிரும் அதனதன் நிலையில் சித்தியடைய முயன்று வருகிறது.

விசயப்பற்றுடன் கூடிய லௌகீக புத்தியுடைய ஒருவன் பல பேருடன் சேர்ந்திருந்து காலம் கழிக்க விரும்புகிறுன். பேச்சுக்கு ஆள் இல்லாவிட்டால் பைத்தியம் பிடித்தவன் போலாகி விடுகிறுன். புதிதாகத் தனித்திருந்து பழகுபவனுக்கு மனதைப் பரிசீலனை பண்ண இயலுகிறது. அளவுடன் உண்பவன் யோகியாகிறுன். மனதில் தெளிவும் உடலில் ஊக்கமும் அதனுல் உண்டாகின்றன. அகங்காரமானது வெகுபிடிவாதமுள்ள அஞ்ஞானம். எவ்வளவுதான் சிரமப்பட்ட போதிலும் அதை முற்றிலும் போக்குவது முடியாத காரியம். தெய்வத்தின் சகாயமும் மனிதனுடைய நேர்மையான முயற்சியும் ஒன்று சேர்ந்திருக்க வேண்டும். மனிதனுக்கு வேண்டியதை எல்லாம் தெய்வம் செய்துவைக்கும் என்று முயற்சியையெல்லாம் நிறுத்திவிடலாகாது. கடவுளைச் சார்ந்திருந்து தன் கடமையைக் கடவுள் பொருட்டு முழுமனதுடன் செய்யவேண்டும். நல்ல முயற்சியுடையவனுக்கு செல்வமும் சீரும் சிறப்பும் வளரும்.

ஓயாது கருமம் செய்து கொண்டிருப்பதற்கு இடையில் ஞானத்தின் அர்த்தத்தை எண்ணிக் கொண்டிருப்பவர் உடல் அழியும்போது பரமபதத்தை அடைகிறுன்.

இந்திரியங்களைக் கட்டி ஆளுபவன் எச்செயலைச் செய்தாலும் அதை ஒழுங்காகவும் நேர்மையாகவும் செய்வான். மனக்கலக்கமுள்ளவனுக்கு அபசகுனங்கள் தென்படலாம். வீரன் ஒருவனுக்கு மனக்கலக்கம் பொருந்தாது. கலைஞானம், செல்வம், மனைவியர், மக்கள், ராஜ்யம் இவையாவும் பிரியத்தைத் தருபவைகள்; இவை பிரேயஸ் எனப்படும். சிரேயஸ் தேவையாகில் மனநிலை மாறுபாடடைந்து வணங்கிக் கேட்கவேண்டும். (சிரேயஸ்) யோகமும் ஞானமும் தேவையெனக் கேட்கும் பொழுது பஞ்சபூதச் சேர்க்கை வித்தியாசமடைவதால் அவற்றின் பலனுகை மனநிலை மாறுபாடடைய பஞ்சபூதச் சேர்க்கை மாறுபாடடைகிறது. அவை அவனுக்கு கிடைக்கின்றன.

மரணமடைந்தவர்கள் கொஞ்சக்காலம் பிறிதொரு லோகத்தில் வசிக்கின்றனர். அவர்களைக் குறித்து எண்ணும் நல் எண்ணம் அவர்களுக்குச் சகாயம் செய்கிறது. வறியோருக்கும் மற்றையோருக்கும் சிரார்த்த காலங்களில் உணவளிக்கப்படுகிறது தர்மமாகும்.

மனமொன்று எண்ண மொழி ஒன்றுபேச இவ்விரண்டுக்கும் மாறான ஒன்றை மெய் செய்ய மனிதனது ஆற்றல் சிதறலடைகிறது. மூன்றிலும் பொருந்தி ஒன்றுபட்டிருப்பவன் பேசுவது நிறைமொழி. ஆற்றுவது செயற்கரிய செயலாம். இது வாழ்க்கை சம்பந்தமான பேருண்மை. விருப்பும் வெறுப்பும் தான் மனிதனைக் கருமத்தில் கட்டுப்படுத்துகின்றன. கருமத்தில் அல்லது கருமபலனில் பற்றில்லாது செய்யும் பொழுது பழைய கர்மம் குறைகிறது. புதியது ஒன்றும் சேர்க்கப்படுவதில்லை இந்த மனநிலை முக்திக்கு மார்க்கமாகிறது. மனதை ஒருமுகப்படுத்துதல் உலக காரியத்துக்கும் பயன்படும். முதலில் மனம் ஒருமுகப்படுமளவு அதற்கு வல்லமை வருகிறது. விரிந்தோடும் சூரிய கிரணங்களை பூதக் கண்ணாடிமூலம் குவியச் செய்தால் ஒளியும் வெப்பமும் அதிகரித்து ஒரு செத்தையில் தீ மூட்டுதலும் முடியும். அங்ஙனம் மனது குவியும் பொழுது பஞ்சபூதச் சேர்க்கை வித்தியாசமடைந்து எதை எண்ணுகிறதோ அதன் பாவனையை விரைவில் எடுத்துச் செயலும் திறம்பட்டதாகிறது.

கழுகு ஆகாயத்தில் உயரப் பறக்கிறது. ஆனால் கீழே எங்கு பிணம் கிடக்கிறது என்பதிலேயே கருத்துடையதாயிருக்கிறது. வேத சாஸ்திரங்களை எவ்வளவு கற்றறிந்தாலும் காமவசப்பட்டிருக்குமளவு அச்சாஸ்திரிகள் கழுகு போன்றவர்களே. காமமும் காசு ஆசையும். பதவி ஆசையும் உள்ளத்தில் குடிகொண்டிருக்குமளவு ஞானத்தைப் பெறமுடியாது.

ஆசையோடு கூடிய கருமமே கொடியது. சுவர்க்காதி போகங்களை விரும்பி வினையாற்றியவர்களெல்லாம் ஆசைக்கு அடிமைப்பட்டவர்களே. ஆசையை வெல்லுமளவு மனிதன் சுதந்திரத்தில் நிலைக்கிறான். பயன் கருதாது பணி செய்பவனுக்கு சித்தம் தெளிவடைகிறது. ஆற்றலும் அதிகரிக்கிறது. ஆக கருமம் நடைபெறவேண்டும். கருமபலனில் ஆசை வைக்கலாகாது.

எல்லாத் தொழில்களிலும் மனது நடுநிலை நிற்பது யோகம். நடுவு நிற்கின்றளவு கருமம் திறம்படச் செய்யப்படுகிறது. கணவனுக்கு பணிவிடை செய்த மாது ஒருத்தி, திறம்படத் தன் கடமையைச் செய்ததினால் காட்டில் தவம் புரிந்து கொக்கை எரித்த முனிவரை விட மேலானவள் ஆயினாள்.

உனது காம இச்சைகளை நன்ருய் அடக்கியாளப் பிரயத் தனப்படு. அதில் ஜெயமடைந்தால் சரீரத்தில் ஒருவித மாறு பாடு உண்டாகும்.

இந்திரிய சக்திகளை ஆத்ம விசயத்தில் ஈடுபடுத்தும் மேதை என்ற ஒரு நாடி வளர்கிறது. இந்த நாடி வளர்ந்த பின்பே ஆத்ம விசயமான உயர்ந்த ஞானம் உண்டாகிறது. விசப் பாம்பு நடமாடும் வீட்டில் உள்ளவர்கள் வெகு ஜாக்கிரதையாக இருப்பதுபோல் காமத்துக்கும், காசு ஆசைக்கும், பதவி ஆசைக்கும் உட்படாமல் கவனமாய் இருக்கவேண்டும். சினத் தால் மனக் குழப்பம், குழப்பத்தால் நினைவின்மை, நினைவு நாசத்தால் புத்தி நாசம், புத்தி நாசத்தால் ஆள் அழிகிருன்.

இரண்டு வேளைகளில் இறைவன் புன்னகை புரிகின்ருன். ஒருவன் கொடும் நோயால் வருந்திச் சாகும் தறுவாயில் வைத்தியன் வந்து நோயாளியின் தாயைப் பார்த்து பயப்பட வேண்டாம், உன் மகன் உயிரைக் காப்பாற்ற நான் இருக்கி றேன் என்று சொல்லும் போதும், மற்றையது இரண்டு சகோ தரர்கள் தங்களுடைய நிலத்தைப் பங்கிட்டுக்கொள்ள அளவு கோலைக் கையில் எடுத்துக்கொண்டு கோடு கிழித்து அந்தப் பக்கம் உன்னுடையது இந்தப்பக்கம் என்னுடையது என்று சொல்லும் போதும் புன்னகை புரிகிருன்,

கண்டுபிடிக்கப்பட்டதும் திருடன் ஓடிப் போய்விடுகிருன், அதேபோல மாயையின் சுபாவம் இன்னதென்று நீ ஆராய்ந்து கண்டு பிடித்துவிட்டால் அது உன்னிடமிருந்து ஓடிப்போய் விடும்.

பாவம் என்னும் சொல்லில் புண்ணியமும் அடங்கியிருக்கி றது. ஏனெனில் ஒரேசெயல் பயன்படுத்துதற்கு ஏற்றவாறு புண்ணியமாகவோ பாபமாகவோ காட்சி கொடுக்கிறது. ஞானம் இல்லாதவர்கள் கருமத்தை முறைதவறிச் செய்து அதைப் பாபமாக்கி விடுகின்றனர். ஞானமுடையவர் அதே கருமத்தை முறையாகச் செய்து அதை புண்ணியமாக மாற்றுவதுமல்லாது கரும பந்தத்திலிருந்தும் விடுபடுகின்றனர்.

கிழிந்த மூட்டையிலிருந்து சிதறி நாலாபக்கமும் ஓடிய கடுகைப் பொறுக்கி எடுப்பது சிரம சாத்தியம். அதுபோல

பல திசைகளிலும் ஓடி உலக விசயங்கள் பலவற்றிலும் உழலும் மனதைக் குவியச் செய்வது எளிதன்று. மனம் குவிந்து ஒருமைப்படுவதே ஞானம் தியானம்.

பொருள் உள்ள அளவு மண்ணுலகில் மதிப்பு இருப்பது போன்று புண்ணியம் உள்ள அளவு விண்ணுலகில் மதிப்பு உண்டு. அது அழிந்ததும் அங்கு அவர்களுக்கு இடமில்லை. புதிய புண்ணியத்தைத் தேட கரும பூமிக்கு அவர்கள் வருகிறார்கள். சுதந்திரமற்ற இன்ப வாழ்வுக்காக அவர்கள் எங்கும் உழன்றாக வேண்டும்.

எல்லா மனிதரிடத்தும் இறைவன் இருக்கிறான். ஆனால் இறைவனிடத்தில் எல்லா மனிதர்களும் இல்லை. இதுதான் அவர்கள் துன்பமடையக் காரணமாகிறது.

கீழ் மக்களும் விரைவில் மேன்மக்கள் ஆவதற்கு வழியுண்டு. எண்ணமே பெருமைக்கும் சிறுமைக்கும் முதற் காரணம். இடையறாது இறைவனைப் பக்திபண்ண வேண்டும் என்ற எண்ணம் வலுக்கும்போது முன்னைய பாவச் செயல்களைப் பற்றிய எண்ணங்கள் அடிபடுகின்றன. நற்செயலுக்கும் நல்லியல்புக்கும் வித்தாவது நல்லெண்ணம். இடையறாது உண்மையை நேசிக்க தீர்மானம் செய்கிற அளவில் கேடுடைய ஒருவன் சாதுவாகிறான். சிறப்பு வருமாதலால் அவன் நன்கு தீர்மானித்தவன் ஆகிறான்.

மனம் எங்கேயோ போய்விடும் பொழுது காதால் கேட்டாலும் கண்ணால் பார்த்தாலும் ஒன்றும் பொருள்படுவதில்லை. உயிரற்றதிற்கும், உயிருள்ளதிற்கும் வித்தியாசம் உணர்வில் அல்லது அறிவில் இருக்கிறது. சேதனம் அல்லது அறிவு அதிகரிக்குமளவு உயிர் மேலானதாகிறது. இறுதியில் தூய அறிவே தெய்வமாகிறது.

பொற்காசு ஒன்றை இழந்தவன் அதன் மீது நின்றுகொண்டே அதை எவ்வளவு தேடினாலும் அதை அடையமாட்டான்.

வேதம், வேள்வி, தபசு முதலியன மனிதனைப் பண்படுத்துதற்கு பயன்படலாம். ஆனால் கடவுளைக் காண இவையாவும் உதவமாட்டாது. கடவுளுக்குப் புறம்பாக எதையும் பொருட்படுத்தாதவன் கடவுளைக் காண்கிறான்.

ஒரு பருந்து ஒரு மீனைக் கௌவிக் கொண்டதைக் கண்ட சில காக்கைகளும் பருந்துகளும் அதைப் பறிக்கப் பின்தொடர்ந்து ஆரவாரித்தன. தொந்தரவைப் பொறுக்காத பருந்து அம்மீனைப் போட்டுவிட்டது. உடனே அதை வேறொரு பருந்து கௌவிக்கொள்ள அதைப் பறிக்க காகங்களும் வேறு பருந்துகளும் தொந்தரவு செய்தன. ஆனால் முதல் பருந்து சாந்தமாய் ஒரு கிளையில் உட்கார்ந்திருந்தது. உலகப் பற்றுகளாகிய சுமையை மனிதன் கீழே போடாத வரையில் அவனால் உலக சஞ்சலங்களிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது.

பட்சணங்களில் மேல்கூடு அரிசி மாவினால் செய்யப்பட்டிருக்கும். அவைகளின் உள்ளே இருக்கும் பண்டங்கள் வேறு வேறு விதமானவைகளாக இருக்கும். அதுபோல மனித சரீரங்கள் எல்லாம் ஒரேவிதமான பொருளால் ஆக்கப்பட்டிருப்பினும் இருதய சுத்திக்கு ஏற்றபடி மனிதர்கள் வித்தியாசப்படுவர்.

முற்பிறப்பில் மனிதன் செய்த முயற்சி வீண் போவதில்லை. தேவ இயல்பு சம்சார பந்தத்திலிருந்து விடுபடுவதற்கு ஏதுவாகிறது. அசுர இயல்பு பந்தத்தைப் பலப்படுத்துகிறது. ஒரு சென்மத்தில் அடைந்த பயிற்சி அடுத்த சென்மத்தில் அந்த சீவனது இயல்பாக அவனிடத்து அமைகிறது. அசுர இயல்புடையார் முக்கரணங்களையும் முறை தவறிக் கையாளுகின்றனர். மரணத்தோடு அவர்களுடைய ஆசை முடிவு பெறுவதாக மற்றவர்களுக்குத் தென்படுகிறது. ஆனால் திரும்பப் பிறக்கும் பொழுது அதே ஆசை தோற்றத்துக்கு வருகிறது. அது பூர்த்திபண்ண முடியாத ஆசையாகிறது. இக்காலத்தில் பலர் கோயில் கட்டுவதும், விழாக் கொண்டாடுவதும், ஆராதனை - அபிஷேகங்கள் செய்வதும் இத்தகைய இயல்புகளுடையவைகளாகின்றன. விளம்பரப்படுத்திக் கொள்வதே அவர்களின் கருத்தாகும். கடவுளின் பெருமைக்கென்றே தொண்டாற்றுவது தெய்வ சம்பத்துடையவர்களின் இயல்பு. அசுர இயல்புடையார் தங்கட்கு வாய்த்த பலத்தையெல்லாம் மற்றவர்களைச் சிறு

மைப்படுத்துவதிலே உபயோகிக்கின்றனர். இறுமாப்பு ஒருவனை நெறி பிறழ்ந்து போகும்படி தூண்டுகிறது. மலையுச்சியிலிருந்து கீழே உருண்டுவரும் கல் பள்ளத்தாக்கு வரையில் விரைவதுபோன்று அசுரன் ஒருவன் புல்லிய நிலையில் எல்லை காணும் வரையில் கீழ்மையுறுகிறான். கெட்டவன் ஒருவன் திரும்பி மேல் நோக்கிப்போக ஆரம்பித்து விட்டால் அவன் அதிவிரைவில் முன்னேற்றமடைந்து விடுகிறான். சம்சார சாகரத்தைக் கடந்து அப்பால் செல்ல சாஸ்திரம் உற்றதுணையாகிறது. இயல்பையும் வினையையும் கொண்டு ஒருவனிடம் படிந்துள்ள குணத்தைக் கண்டுபிடிக்கலாம். அசுர இயல்புடையார் புரியும் கொடுந்தவம் அவர்களுக்கே இன்பம் தருவதில்லை. ஆணவமும் ஆசையும் நிறைந்த அவர்களது மனதில் இறைவன் புறக்கணிக்கப்படுகிறார். சான்றோர்கள் சொல்லும்நெறி இதுவல்ல.

பகல் வேளைகளில் வேண்டியவாறு உணவு அருந்து. இரவில் அருந்தும் உணவைப் பெரிதும் குறைத்துவிடு.

குறைபாடில்லாத கருமமில்லை. குறைபாட்டை முகாமையாகக் கொண்டு கர்மம் செய்யாமலிருக்க முடியாது. கருமம் ஒவ்வொன்றும் ஓம் என்று உச்சரித்துக் கொண்டு துவக்கப்படுகிறது. இச்செயல் நாளடைவில் விக்கினேஸ்வர பூசையாக வடிவெடுக்கலாயிற்று. ஓசையெல்லாம் ஓங்காரத்தில் ஒடுங்குவது போன்று தனித்த செயல்களெல்லாம் இயற்கைத் திட்டத்திற்கு ஒத்திருக்க வேண்டும். அப்போது அது குறைவின்றி நிறைவேறுகிறது.

தன் பொருட்டுச் செய்யும் கருமம் எவ்வளவு நல்லதாயிருந்தாலும் கேடுடையதாய் விடும். கடவுள் பொருட்டு செய்யப்படும் கருமம் குற்றமுடையதாயிருந்தாலும் அதிவிரைவில் நற்கருமமாய் மாறிவிடுகிறது.

சாத்விக இயல்புடையவன் செய்யும் ஆன்ம சாதனங்களை ஆடம்பரமாக மற்றவர்களிடம் காட்டிக் கொள்வதில்லை. கூடிய வரையில் தனியாக அவன் அவைகளைச் செய்து முடிக்கிறான். இரவில் மற்றவர்கள் தூங்கிக்கொண்டிருக்கும்பொழுது அமைதியாகத் தியானம் செய்கிறான்.

உணவையும் உறக்கத்தையும் தியாகம் செய்துவிட்டு மனிதன் அல்லும் பகலும் உழைக்கிறான். அதன் பயனாக இன்னும் கொஞ்சம் செல்வம் சேரும் என்ற நம்பிக்கை அவனை அச்செயலில் தூண்டுகிறது. உடலின் தேவைகளையும் சுருக்கிக்கொண்டு ஒருவன் பாடுபடுகிறான். இன்பம் கிடைப்பதாலேயே அவைகள் இவ்வுலக வாழ்க்கையை விரும்புகின்றன. சலிப்படையாது தளர்வுறாது எல்லா உயிர்களும் உழைக்கின்றன. வெவ்வேறு உயிர்கள் வெவ்வேறு விதங்களில் இன்பத்தைப் பெறலாம். உயிரைக் கொடுத்து இன்பத்தைப் பெற அவைகள் எத்தனிக்கின்றன என்றால் மிகையாகாது.

நல்லறம் பயிலுதல் பொருளையும் இன்பத்தையும் பெற்று வைத்திருத்தல் பொருட்டேயாகும். இம்மைக்கு ஏதுவாகிய அறம், பொருள், இன்பங்களில் பெரும் பற்றுதல் வைப்பது ரசோ குணத்தின் இயல்பு. அது மனிதனை உலக பந்தத்திலேயே ஆழ்த்திவைக்கிறது. காமகுரத்தினால் வாதைப்பட்டு சிற்றின்பங்களில் ஆசைவைத்து உலகப் பற்றுள்ளவன் ரூபலாவண்யங்களின் வனப்பினிடையும் செல்வத்தின் கவர்ச்சிகள் மத்தியிலும் இருந்தால் அவனால் ஆசையை அடக்க முடியாது. அவனுக்கு பக்தி மார்க்கம் சரிவராது.

பகவானைக் காணும் பாக்கியம் கிடைத்தால் அவரிடம் என்ன கேட்பாய்? வைத்தியசாலை, பாடசாலை,. அன்ன சத்திரம் வேண்டுமென்று கேட்பாயா! இவைகளெல்லாம் கடவுளைக் காணும்வரையில் நமக்கு உண்மையாகத் தோன்றும். ஆனால் கடவுளை நேரில் கண்டதும் இவையெல்லாம் நிலையில்லாதனவாகக் கனவில் காணப்படுவனபோல் தோன்றும் ஆதலால் கடவுளிடம் அன்பு வேண்டியும் அறிவு வேண்டியும் பிரார்த்திப்போம். நாம் அப்போது தெய்வத் தன்மைக்கு உயர்த்தப்படுகிறோம்.

என்னதான் முயன்றாலும் உன் இருதயத்திலிருந்து அகங்காரம் முழுவதும் நீங்கினால்தான் இறைவன் கிருபை கிடைக்கும். நான் கர்த்தா என்ற எண்ணம் உன் மனத்திலிருந்

தால் நீ ஒருபோதும் இறைவனைக் காணமாட்டாய். அகங்காரம் இருக்கும் வரையில் ஞானமும் முக்தியும் கைகூடாது. அகங்காரம் வெகு பிடிவாதமுள்ள அஞ்ஞானம். எவ்வளவு சிரமப்பட்ட போதும் அதை முற்றிலும் போக்குவது முடியாத காரியம்.

இயற்கையைப் பற்றி இப்பொழுது நாம் அறிந்துள்ள பல மர்மங்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக மறைந்திருந்தன. குருட்டு நம்பிக்கையை சாஸ்திரம் ஆமோதிப்பதில்லை. ஆனால் யுக்திக்கும் அனுபவத்துக்கும் ஒத்திருக்கும் கோட்பாட்டை யாரும் அசைக்க முடியாது.

ஒருவன் கள் குடித்தாலும், கொலை புரிந்தாலும், களவு செய்தாலும் நற்றவம் செய்து உய்வு பெறலாம். ஆனால் நன்றி கொன்ற பாவத்துக்கு மட்டும் உய்வு கிடையாது. — 'கந்தபுராணம்'

உண்மையானது எம்மனிதனால் சொல்லப்படுகிறது என்பதை அடிப்படையாகக் கொண்டதல்ல; உண்மை தனக்குத்தானே சான்று ஆகிறது. உடல் வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும், ஆன்ம வளர்ச்சிக்கும் சுதந்திரம் முற்றிலும் அவசியமானது.

பிறரைத் தன் காரியத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளுதற்கு ஒருவன் உறவாடலாம். அது பொருந்தாது. தன் வாழ்க்கை பிறருக்கு பயன்படும்படி செய்யவேண்டும். அப்போது அது கருணை எனப் பெயர் பெறுகிறது. பிறரிடத்து கருணை காட்டுதலால் தன் பொருளுக்கு நஷ்டம் வரலாம். அதைப் பொருள்படுத்தாத நிலை மமகாரம் அற்ற நிலையாம். தேவாலயங்களில் ஒவ்வொரு மனிதனும் தனது சொந்தப் பெயர் சொல்லி அர்ச்சனை செய்ய விரும்புகிறான். இத்தகைய குணம் ரசோகுணம். தனக்குப் பயன்படுகிற பாடசாலையை மாணாக்கன் ஒருநாள் தியாகம் செய்தாக வேண்டும். அப்பாடசாலையில் கட்டுண்டிருப்பது அவனது குறிக்கோள் அல்ல. கருமத்தை மனிதன் முடிவில் துறந்து அதீதத்தில் போகவேண்டும். கருமத்தை விடுவதற்கு முன்பு கர்ம தத்

துவத்தை தெரிந்துகொள்வது அவசியம். பட்டுப்புழு கூடு கட்டுகிறது. சிலகாலம் கூட்டினுள் அடைபட்டிருக்கிறது. புழுவாக இருந்து பூச்சியாக மாறியதும், தான் கட்டிய கூட்டைத் தானே உடைந்துத் தள்ளுகிறது. கர்மிய கருமத்தின் வாயிலாக உலக வாழ்வின் தரத்தை மனிதன் கற்றுக் கொள்கிறான். ஆசையை வென்ற மேலோர் தருமமாகச் செய்வார்களானால் இவ்வுலகமே பரலோகமாகக் காட்சி கொடுக்கும்.

ஒருவனுடைய கொள்கை எதுவாயினும் ஆகுக. அது முக்கியமானதல்ல. ஆனால் அவன் சிந்திப்பதும் சொல்லுவதும் செய்வதும் முற்றிலும் பொருந்தி ஒன்றுபட்டிருக்க வேண்டும். அப்போது அவன் ஆன்ம சக்தியுடையவன் ஆகிறான். அவன் பேசுவது நிறைமொழி.

தத்துவ தரிசனம் என்பது உண்மையைக் காணுதல். உள்ளது எது என்று தேடுவது உயிர்களின் இயல்பு. ஞான சாதனம் பழகுபவன் தனக்குரிய கருமத்தைச் செய்வதற்கிடையில் தன்னை கர்த்தாவாக உணரலாகாது.

---

எ—

## விவேகானந்தர்

*அருபக் கடவுளின் வழிபாடு நம்மை அளவற்ற சக்தியுள்ளவர்கள் என்று நினைக்கச் செய்கிறது. மகத்தான ஆத்மாவில் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும், அதிலிருந்து பெருஞ் சக்தி தோன்றும். நாம் நினைத்தபடி ஆகிறோம். உங்கள் பிள்ளைகளை தைரியம் கொடுக்கக் கூடிய எண்ணங்கள் ஊட்டி வளர்த்து வாருங்கள், பலவீனமாக்குகிற கருத்துக்களையும் வழிபாடுகளையும் அவர்களுக்கு கற்பிக்காதீர்கள். அவர்கள் தன்னம்பிக்கையுடன் இருக்கட்டும். இங்ஙனமாவதற்கு அவர்கள் முதலில் ஆத்மாவின் மகிமையை உணரட்டும். வேதாந்தப் போதனைகள் அனைத்திலும் மேலானது ஆத்மாவைப் பற்றிய உயிர் கொடுக்கும் எண்ணம்தான். எல்லாவற்றிலும் மேலாக நாம் உணர வேண்டியது ஒன்று. நாம் பொறாமையில் மூழ்கிக் கிடக்கிறோம். கடவுள் ஆராதனை நடக்கும் இடங்களில்கூட நாம் மற்றவர்களுக்கு முன்நிற்க விரும்புகிறோம். இதைவிடக் கேவலமான உணர்ச்சி வேறு இருக்க முடியாது. இப்பொறாமையை அகற்ற வேண்டும், இதுதான் எமது பெரும் பாவம், எல்லாரும் அதிகாரம் செய்ய விரும்புகிறார்கள். ஒருவரும் சேவை செய்ய விரும்புவதில்லை, பொறாமையை மனதிலிருந்து அகற்றினால் மகத்தான செயல்களை செய்யக்கூடிய சக்தி பெருகும்.*

# பகுத்தறிவின் விளைவு

உலகிலேயுள்ள உயிர்கள் பஞ்சபூதச் சேர்க்கை விகிதாசாரம் கூடிக் குறைதல் காரணமாக வெவ்வேறு இயல்புகளை உடையன. ஒவ்வொரு உயிரின் ஆத்மாவிலும் வினைப்பயன் புள்ளிகள் வெவ்வேருக அமைந்திருக்கும், ஒன்றுபோல் மற்ருென்று இருக்க முடியாது. கருத்துக்களும் ஒன்றுபோல் மற்ருென்றுக்கு இருக்க மாட்டாது, ஆனல் 1, 2, 3, 4, 5 அறிவுள்ள உயிரினங்கள் எல்லாம் சுகத்தை விரும்புவது கிடையாது. அவை அவைக்குத் தேவையானவற்றை அவை அவை தொழில் செய்தே பெறுகின்றன. மரம் முதல்கொண்டு மிருகம் ஈருன அனைத்து உயிரினங்களும் செயல்பட்டே தங்கள் காரியத்தைக் கழிக்கின்றன. மரங்கள் செயல்பட்டு மற்றைய உயிரினங்கட்கு சேவை செய்கின்றன. அதே போல் மற்றைய உயிரினங்களும் செயல்பட்டு ஒன்றுக்கொன்று சேவையாற்றுகின்றன, ஆனல் நாகரீகம் அடைந்த மனிதன் சுக வாழ்வை விரும்பி எத்தனையோ தந்திரங்களைக் கையாளுகின்ருன். மனிதனுக்குக் கொடுக்கப்பெற்ற 6வது பகுத்தறிவை சகல உயிரினங்களையும் அடக்கி ஆள முற்படுத்துகிருன், இங்கு மனித வர்க்கத்தையும் அடக்கி ஆள முற்பட்டு தீவினையை வளர்த்துக் கொள்ளுகிருன், குடும்ப வேற்றுமை முதல் வேற்றுமை வளர வளர இடவேற்றுமை, இனவேற்றுமை, சாதி வேற்றுமை. கிராம வேற்றுமை, நகர வேற்றுமை மாவட்ட வேற்றுமை, மாகாண வேற்றுமை, தேச வேற்றுமை என பாந்தளவில் வேற்றுமைப் படுவதைக் காண்கிருேம். உண்மைப் பொருளின் இயல்பை அறியாமல் வேற்றுமையை வளர்க்கிருேம். எந்த உயிரினமும் செயல்படாமல் (தொழில்படாமல்) வாழ முடியாது. செயல்படாமல் வாழ்வதற்கு உரிமையும் கிடையாது, மனிதன் சுகவாழ்வு என்பதற்கு சரியான விளக்கம் தெரியாமல் அலைகிருன், இக் காரணங்களால் வீண் பிரச்சினைகளை ஏற்படுத்தி அப்பிரச்சினைகளைத் தீர்க்கும் வழி தெரியாமல் மென்மேலும் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கிருன். இங்கே தந்திரங்களைக் கையாளும் முறையை எல்லாரும் பின்பற்றுவதால் உண்மைப் பொருளுக்கு வர விரும்புகிருர்கள் இல்லை. உண்மைக்கு வந்தால் ஏதோ பெருநஷ்டம் வந்ததுபோல் எண்ணித் திரும்பத் திரும்ப தந்திரங்களைக் கையாளுகின்ருர்கள், சுகமாக வாழ விரும்புபவர்கள் இப்படியாக உண்மையை உணராமல் செயல்பட்டு எல்லா மக்களுக்கும் கஷ்டத்தை ஏற்படுத்துகிருர்கள்,

கடமையைச் சரிவரச் செய்து சுகம் பெறலாமேயன்றி பொன்னுலும் பொருளாலும் பெண்ணுலும் பிள்ளையாலும் சுக வாழ்வை அடைய முடியாது, உண்மைப் பொருளால் வரும் சுகம் ஆனந்தமானது.

*சிவமயம்*

# சக்தி

அறிவு கல்விமூலம் வளர்வது. பாடசாலையிலும் பல் கலைக் கழகத்திலும் பயில்வதால் மட்டும்தான் கல்வி அறிவு பெறலாம் என்பதில்லை. பள்ளிப் படிப்பால் மட்டும் ஒருவருக்குத் திறமை வருவதில்லை. விடாமுயற்சியாலும் தன்னம்பிக்கையாலும் திறமையை வளர்க்கலாம். அனுபவத்தால் அதனை மேலும் வளர்க்கலாம். அறிவும் திறமையும் எல்லோருக்கும் வாய்த்துவிடும் என்பதல்ல. அவை இயற்கை வழங்கும் வரங்கள், ஆண்டவன் அருளும் வரம். பல்கலைக் கழகம் செல்லாது சொந்த முயற்சியால் அறிவொளியாகத் திகழ்பவர் பலர். உண்மையான அறிவும் திறமையும் உள்ளவர்களை கௌரவிக்கும் பண்பு எம் மத்தியில் வளரவேண்டும்.

சுவாமி சிவானந்தர் கடைசிப் பிறந்த தின அறிவுரை:- முதலில் கடவுள், அப்புறம் உலகம், கடைசியாகவே நீ. புறத்தில் மட்டும் கடவுளைத் தேடினுல் போதாது என்று எமது நுண்ணறிவானது எமக்குப் புகட்டுகின்றது. நுண்ணறிவானது காலத்திற்கு உட்பட்டதன்று. கடவுளை எல்லாவற்றிற்கும் மேலான சக்தி என உணர்பவர்களிடம் தமக்குரிய கடவுள் என்ற கருத்து இராது. கடவுளைப் பற்றிய இயல்புகளை மனிதனே கற்பனை செய்வதினுல்தான் ஒரே கடவுளை அதன் பல இயல்புகளிற்காக பல கோயில் வாசற்படிகளில் ஏறியிறங்குகிருன். முதலில் உண்மையை - கடவுளை வெறும் சமயமாகவும், கொள்கைகளாகவும் கோட்பாடுகளாகவும் கொண்ட தப்பான கருத்துக்களை மனிதன் களைய வேண்டும்.

உண்மையானது குறிப்பிட்ட ஸ்தானத்திற்கோ மதத்திற்கோ உரியதன்று. பிரபஞ்சத்தை அளவிடவியலாது. அதைப் படைத்தவன் எந்த ஒரு உருவத்துக்கும் அப்பாற்பட்டவனுகவே இருக்கவேண்டும். அப்படிப்பட்டவனைச் சக்தி என்று அழைக்க விரும்பினுல் அச்சக்தியானது எந்த

ஓர் உருவத்திற்கும் அப்பாற்பட்ட அளவிடமுடியாத சக்தி யாகவே இருக்க வேண்டும். அறியாமை மன்னிக்கக் கூடி யது. ஆனல் அறியாமையை உடையவர்களாக இருக்க விரும்பும் அவர்களது மனத்திடத்தை மன்னிக்க இயலாது. அளவிட முடியாத சக்தியை சோதனைக் குழாயில் போட்டு ஆய்வு கூடத்தில் பரிசோதனை செய்ய முடியாது. அவர்கள் உண்மையைத் தேடி அண்டவெளிக்குச் செல்ல வேண்டிய தில்லை. பதிலுக்கு தத்தமது அகங்களுக்குள் ஊடுருவிச் செல்ல வேண்டும். நுண்ணறிவு ஒன்றினல் மட்டுமே இது முடியும்.

ஒளியைப் படைக்காமல் பிரபஞ்சத்தை இறைவனல் படைக்க முடியவில்லை. உண்மை என்ற ஒன்றே முதலில் இப் பிரபஞ்சத்தில் இருந்திருக்க வேண்டும். வேறு ஒன்று மில்லாத இப் பிரபஞ்சத்தில் உண்மையால் எவ்வாறு ஒளி யைப் படைத்திருக்க முடிந்தது என்ற வின எம்முள் எழவே செய்யும். தன்னிலிருந்து ஒளியைப் படைக்காமல் வேறு எவ்வழியில் உண்மையால் ஒளியைப் படைத்திருக்க முடி யும் என எம்முள் சந்தேகம் எழுவது இயற்கையே. சிலந்தி தனதுடலில் இருந்தே கூடுகட்டுவது போலவே உண்மையும் தன்னுள் இருந்தே ஒளியைப் படைத்திருக்க வேண்டும். இதிலிருந்து ஒளியானது உண்மையிலிருந்தும் பிரித்துப் பார்க்க முடியாத ஒன்று எனத் தெரிகிறது. சுருங்கக்கூறின் ஒளியே உண்மை - கடவுள்.

இலத்திரன்களின் சுழற்சியால் எழுந்த சக்தியே இன்று நாம் காணும் சகல உருவமுடைய பொருள்களின் அடிப் படை. இதிலிருந்து கடவுள் அனைத்திலும் சக்தி வடிவமாய் உள்ளான் என்ற உண்மை எமக்குப் புலப்படுத்தப்படுகிறது. சிவமானது எந்த மதத்திற்கோ மனிதர்களுக்கோ சொந்த மான தனியுரிமைக் கடவுளன்று. நாம் எப்பொழும் உண் மைக்கு அண்மையிலும் அதனுள்ளும் இருக்கின்ருேம். பல் லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் நுண்ணறிவு படைத்த அகஒளியைக் கண்ட ஞானிகளால் உரைக்கப் பெற்ற உண்மை இன்றுதான் விஞ்ஞானிகளால் நிறுவப்

பெறுகின்றது. மனத்தைக் கடந்து உள்ளே சென்றால் இருள் அகலும். உண்மை துலங்கும் என்பதைக் காட்டவே கடவுள் என்ற சொற்பதம் உபயோகத்தில் வந்தது என்பதை நாம் உணரவேண்டும். உண்மையோ தொடக்கமும் முடிவும் அற்றது. இந்த உண்மையை, உள் ஒளியின் மகத்துவத்தை உணர்த்தவே கோயில்களில் கற்பூரம், மெழுகுவர்த்தி, தீபங்கள் உபயோகிக்கப் பெறுகின்றன. இவற்றை எல்லாம் வெளியில் காட்டப்பெறும் ஒளியாகக் கருதி அகத்தில் இருளைத் தாராளமாகத் தேக்கி வைத்துக்கொண்டு புறவாழ்வில் மயங்கி பகட்டை விரும்பி வெறும் கற்பனைகளையும் கோட்பாடுகளையும் கூறிக்கொண்டு அகந்தையுடன் மனிதன் தன் பொன்னான காலத்தைக் கழித்துக்கொண்டு குதூகலிக்கிறான். அக ஒளியைத்தான் கோயில்களில் புற ஒளியாய்க் காட்டுகிறார்கள் என்ற உண்மையை மனிதன் உணர மறுக்கிறான். அகத்திலுள்ள ஒளியை எமது அகத்தினுள் நிறைந்திருக்கும் அறியாமை என்னும் இருள் மறைத்து விட்டது. தான், தனது என்ற ஆணவ இருள் மனிதனைக் குருடனாக்கி விட்டது. நியாய உணர்வு, தர்ம சிந்தனையுடன் பிறந்தால்தான் நாடு உய்யும்.

உழையாமல் உண்பவன் திருடன், வேலை எதுவுமின்றி உண்டு கொண்டிருப்பவன் திருடன், சோம்பேறியாகி உணவு முத்திரையால் உண்பவன் திருடன், ஏழைகள் நாம் பொருள் தேட வழியில்லை என சோம்பியிருந்து, உழைத்துப் பொருள் தேடுபவனிடமிருந்து தட்டிப் பறிப்பவன் திருடன். உற்பத்தியில் நாட்டமின்றி உழைப்பவனிடமிருந்து பறித்துப் பங்கிடுவதில் மாத்திரம் முயலுபவன் திருடன். உழைத்தே உண்ண வேண்டும் என்ற தத்துவம் ஆழமாக வேரூன்றி விட்டால் வறுமைக்கும் இடமில்லை, வளத்துக்கும் குறைவில்லை.

# ஒலியும் மனமும்

நாம் எழுப்பும் ஒலியானது மனதிற் புகுந்து சூட்சும வடிவமாகவும் நாவில் புகுந்து ஸ்தூல வடிவமாகவும் தோற்றமளிக்கிறது. அந்த ஒலி அதற்குத் தகுந்த அலைகளை வாயு மண்டலத்தில் உண்டு பண்ணுவதுமல்லாமல் நிலம், நீர், தீ ஆகிய பூதங்களுடன் கலந்து வெவ்வேறு உருவங்களை அடைகின்றன. நம்முடைய புனிதமான எண்ணங்கள் தீ தத்துவத்துடன் கலக்கும் பொழுது நாம் ரிஷிகளைப்போல் ஆகிறோம். புனிதமான எண்ணங்களும் புனிதமான ஒலிகளும் வாயு மண்டலமூலம் உலகைப் புனிதப்படுத்துகின்றன.

இன்று உலகம் புனிதத் தன்மையில் குறைந்து வருவதைக் காண்கிறோம். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் மனம் அசுத்தமானதுதான். மனம் அசுத்தமானது அசுத்தமான உணவின் காரணமேயாகும். உணவு அசுத்தமானது பூமி அசுத்தமாக இருப்பது காரணமே. பூமி அசுத்தமானது நீர் அசுத்தமான காரணமே. நீர் அசுத்தமானது தீ அசுத்தமான காரணமே. ஆக இவ்வுலகைப் புனிதப் படுத்துவதும் எல்லோரும் இன்புற்று வாழ்வதும்தான் நமது விருப்பம் என்றால் பொய் வார்த்தைகளைப் பேசுவதையும் கெட்ட ஒலிகளையும் முதலில் நிறுத்த வேண்டும்.

எமது உண்மை அல்லாத பேச்சுக்களின் ஒலி அலைகள் காற்றை மாற்றமடையச் செய்கின்றன. காற்று நெருப்பையும், நெருப்பு நீரையும், நீர் பூமியையும். பூமி எமது உணவுகளையும், உணவுகள் எமது மன நிலைகளையும் மாற்றமடையச் செய்து வரும் சந்ததியினருக்கு வீண் பிரச்சினைகளை உண்டாக்குகின்றன.

எமது முன்னோர்கள் முனிவர்கள் - முட்டாள்கள் அல்லர். இன்று விஞ்ஞானம் வளர்ந்துள்ளதா - அர்த்தமுள்ள கேள்வி. திருவிழா, விரதங்கள், தபஜெபம் நிகழும் இடங்கள் இன்று களியாட்டம் நிகழும் இடங்களாய் மாறியுள்ளன.

நோய் மாற்றும் மருந்துகள் புதுப்புது நோய்களாக மாற்றப்படுகின்றன. ஆஸ்பத்திரிகள் புது நோய்களைத் தரும் ஆஸ்பத்திரிகளாக மாறியுள்ளன.

யூதர்களை அழிக்க முற்பட்ட ஹிட்லர் எவ்வாறு மறைந்தான் என ஆராய்வுகள் நடைபெறுகின்றன.

நெஞ்சிற் கல்வி சேர்ந்தவரின் நரிப்புத்தி. புது நோய்கள் உற்பத்தி.

செல்வர்களின் திமிர் போக்கு - இன பேதங்களின் அக்கிரமம் இவை அறிந்திருந்தும் பேசாத கற்றோர்கள்.

ஆக இவ்வுலகு புனிதமாக வேண்டுமானால் எல்லாரும் இன்பமடைய வேண்டுமானால் **உண்மை** ஒளி உள்ளத்தில் ஊற்றெடுக்க வேண்டும்.

நன்மையும் தீமையும் கலந்து நிற்கும் இந்த உலகத்தின் இரகசியத்தை யார் அறிவார். ஒன்றும் பயனில்லை என்று நிராசைப்படுவதும் தவறு. எல்லாம் தாமாகவே சீர்பட்டுவிடும் என்றிருப்பதும் தவறு. கொலையும், பாவமும், ஆணவமும் அதிகம் இருக்கின்றன. ஆனால் அன்பும், அனுதாபமும், அறமும் தெய்வபக்தியும் மிகுந்த அளவிலேயே இருக்கின்றன. இன்று நிகழும் நிகழ்ச்சிகள் பெருங்கடலில் சிறு அலைகள்போல் நடைபெறுகின்றன. இவற்றைக்கண்டு தூங்க வேண்டியதில்லை. மனித உள்ளத்தில் தைரியம் இருக்கிறது. வீரம் இருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும் நாம் விமோசனம் இல்லையென ஏன் எண்ண வேண்டும்? உலக வரலாற்றில் நல்ல கட்டங்களும் உண்டு. துக்க கட்டங்களும் உண்டு. இப்போதும் நாம் துக்க கட்டத்தில் இருக்கிறோம். ஒவ்வொருவரும் நம்முடைய கடமையை நினைவில் வைத்து அறிவிலிகளின் அபவாதத்திற்கு அஞ்சாமல் நடந்து கொண்டோமானால் இந்தத் துக்கக் கட்டம் சீக்கிரமாகத் தீரும். முயற்சியில் கஷ்டமுண்டு. ஆயினும் பயனும் உண்டு. உறுதியை இழக்காமல் அறிவின் துணைகொண்டு உண்மையை உணர்ந்து கடமையைச் செய்வோமாக.

ஈரறிவுள்ள ஊர்வனவும், மூவறிவுள்ள நீர் வாழ்வனவும், நாலறிவுள்ள பறவையினங்களும் ஐந்தறிவுள்ள மிருகவர்க்கங்களும் அணுவான ஆத்மாவிலிருந்து (பஞ்சபூதச் சேர்க்கை-வினைப்பயன்) வினைப்பயனுக்கேற்ற உடலை எடுத்து, தமது கடமைகள் பூர்த்தியானதும் ஆத்மாவானது அணுவாக மாறி ஓய்வு நிலையைச் சென்றடைகிறது. ஆறு அறிவுள்ள மனிதனும் இவ்வாறே முன்வினைப் பயனுக்கேறப

அணுவளவாயுள்ள ஆத்மாவிலிருந்து தோன்றி தனது கடமைகள் பூர்த்தியானதும் பஞ்சபூதங்களும் அவ்வவ் இடங்களை அடைந்துவிட ஆத்மா மட்டும் அணுவுக்கணுவாகி ஓய்வு நிலையைச் சென்றடைகிறது. ஆனால் மனிதனுக்கு மட்டும் உண்மைப் பொருளை அறியும் அறிவு கூடுதலாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வறிவை அவன் உரிய காலத்தில் அறியத் தவறுவானாகில் கடமையை உணராதவனாகிறான். அக்கடமையைச் சரிவர நிறைவேற்றாத தண்டனைக்கு ஆளாகிறான். அதற்காக கீழ்வகுப்புக்கு 5, 4 அறிவுள்ள வர்க்கங்கட்கு மாற்றம் பெறுகிறான். மனித வர்க்கத்திலும் அசுரப் பண்புள்ள அகங்காரம் பெற்ற பொய் நிலையடைகிறான். (பொய் என்பது ஒன்றும் இல்லாமை.)

உண்மையை அறியவேண்டிய அடையவேண்டிய மனிதன், ஒன்றுமே இல்லாத பொய்யை அடைகிறான். இவ்வுலகத்திலே ஆசை காரணமாக எவ்வளவோ கஷ்டப்பட்டு உண்மையை மறைத்து, கோடி ரூபாய்களை சம்பாதித்து, பொய் காரணமாக பொய் நிலையை அடைகிறான். அதைக் கடைசியில் உணருகிறான். அந்நேரம் அவன் அதை உணர்வதில் பிரயோசனமில்லை. இவ் ஆசை காரணமாக அதற்குரிய தண்டனைகளையும் கடைசிக் காலத்தில் அடைந்தே தீருகிறான். அதாவது அவனது சந்ததியாரிடமிருந்து அடி உதைகளையும், அகங்கார வார்த்தைப் பிரயோகங்களையும் தன் கண்முன்னே பெறுகிறான். கோடி ரூபாய்களைச் சம்பாதிக்க என்ன உபாயங்களைக் கையாண்டானோ, அதே பிரதிப் பலன்களை ஒன்றும் செய்யமுடியாத மரணப் படுக்கையில் அனுபவிக்கிறான். தனது வாழ்நாளில் எந்தப் பண்புள்ள வர்க்கத்தை நாடினானோ அதே வர்க்கத்தைச் சென்றடைகிறான். தான் முன் எண்ணிய எண்ணத்தையே அடைகிறான். தனது குடும்ப அங்கத்தவர்களின் வேற்றுமை மனப்பான்மைக்கு காரண கர்த்தாவாகிறான். அக்குடும்பத்தவரின் வீழ்ச்சிக்கும் காரண கர்த்தாவாகிறான். இதிலிருந்து ஒருவன் எந்த எண்ணத்தை நினைக்கிறானோ அந்த எண்ணத்தை அடைகிறான் என்பது சொல்லாமலே விளங்கும்.

ௐ —

# விநாயகர் தரும நிதியம்

புலோலி மேற்கு, பருத்தித்துறை.

விநாயகர் — பிள்ளையார், அறிவுப்பொருள், ௐ— எண்களில் 3 கிரகங்களில் வியாழ பகவான், மனித அவயத்தில் வலக்கண் இவைகளைக் குறிக்கும்.

ஞாபகார்த்தநிதி — திரு. சி. ஆ. சிவக்கொழுந்து
திருமதி ஆ. சி. இராசம்மா
(வ. கோ. சரவணமுத்துவின் மகள்)
செல்வன் ஆ. சி. மு சுப்பிரமணியன்

நோக்கம் — அறிவு வளர்ச்சிப் பணி
ஊனமுற்றோர் உதவிப் பணி
கரும யோகப்பணி

**தருமகர்த்தா சபை**

திரு. ஆ. சி. முருகுப்பிள்ளை
*நிறுவனர், நிர்வாகி, ஆயுட்காலத் தலைவர்*

திரு. வ. கு. கணபதிப்பிள்ளை
*B. A. (லண்.) சட்டத்தரணி, உப தலைவர்*

திரு. வ. ச. செல்வராசா
*செயலாளர் - பொருளாளர்*

திரு. க. தங்கராசா
*நிர்வாகப் பொறுப்பதிகாரி*

கௌரவ உறுப்பினர்கள் :

திரு. அ. துரைசிங்கம்
திரு. சு. வேதாரணியம்
திருமதி கோ. கண்மணி

கௌரவ உப உறுப்பினர்கள் :

திரு. வி. க. கேதீஸ்வரநாதன்
திரு; ஆ. க. சிவப்பிரகாசம்

ஸ்ரீ வாணி அச்சகம்,
இலக்கணவத்தை - உடுப்பிட்டி